தினக்குரல்
THINAKKURAL
AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL
Registered in the Department of Posts of Sri Lanka under No QD/149/NEWS/2021 www.thinakkural.lk yarlthinakkural@gmail.com

ஓசை : 020 குரல் : 258 சனிக்கிழமை 27 நவம்பர் Saturday 27th November 2021. Post Box: 30 Phone: 021-7388301 Fax:021-7388304 விலை 30/= பக்கங்கள் : 12


## சபையில் பிரபாகரனுக்கு பிறந்த நாள் வாழ்த்து

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் 67 ஆவது பிறந்த நாள் வெள்ளிக்கிழமை தமிழர் தாயகப்பகுதிகளில் நினைவு கூர ப்பட்ட நிலையில் பாராளுமன்றத்தில் பிரபாகரனுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களை தமிழ்த் தேசிய பக்கம் 02


## கொரோனா பலி 26

இலங்கையில் ஆண்கள் 16 பேர் உட்பட மேலும் 26 பேர் கொரோனாவுக்கு பலியாகியுள்ளனர்.

நாட்டில் நேற்று முன்தினம் தினம் கொவிட் தொற்றால் 26 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக் பக்கம் 02

# புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் யாழ்.பல்கலையில் கேக் வெட்டி கொண்டாட்டம்



தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்தநாளை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 67 ஆவது பிறந்தநாள் இன்றாகும். அவரின் பிறந்தநாளை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழக வளாகத்தினுள் பக்கம் 02

## -போதைப் பொருள் பாவனையிலிருந்து-

# பாரிய சமூக மாற்றத்துக்காக ஊடகங்கள் உதவவேண்டும்

ச.ஜெயபாலன்

போதைப் பொருள் பாவனையிலிருந்து இன்று சமூகங்கள் மாற்றத்தை கண்டு வருகின்றன. எனினும் பாரிய சமூக மாற்றம் ஊடாக போதைப் பொருள் அற்ற சமூகத்தை உருவாக்க ஊடகங்கள் தார்மீகப் பொறுப்புடன் உதவவேண்டும் என மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் வடக்கு மாகாண பொறுப்பதிகாரி ஏ.கோடீஸ்வரன் தெரிவித்தார்.




நேற்று டில்கோ ஹோட்டல் மண்டபத்தில் இடம்பெற்ற பக்கம் 02

# இன்று மாவீரர் தினம்

## வட – கிழக்கில் கடும் கண்காணிப்பு

### -நினைவேந்த அரசியல் கட்சிகள் அழைப்பு-




மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகள் மற்றும் உலகில் தமிழ் மக்கள் வாழும் இடங்களில் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகள் எங்கும் பல இடங்களில் நீதிமன்ற தீர்ப்புக்கள் ஊடாக பல தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்களுக்கு நினைவேந்தல்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும் நினைவேந்தல் உரிமையை யாரும் தடுக்க முடியாது என தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

மாவீரர் நினைவு அஞ்சலி என்பது எமது அனைவரினதும் உணர்வுகளோடு இணைந்திருக்கும் முக்கியமான நிகழ்வு என்ற அடிப்படையில், அஞ்சலி செலுத்த வேண்டிய எமது தார்மீகக் கடமையாகும். இக்கடமையை எந்த சூழ் நிலையிலும் நாம் நிறைவேற்றியே ஆகவேண்டும் எனவும் அக்கட்சிகள் தெரிவித்துள்ளன. பக்கம் 02

# நினைவேந்தலைத் தடுக்க கோரிக்கை நிராகரித்தது முல்லைத்தீவு நீதிமன்றம்



முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு கடந்த 17 ஆம் திகதி மற்றும் 23 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட எழுபத்திரெண்டு பேருக்கு தடை உத்தரவுகள் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு,முள்ளியவளை ஒட்டுசுட்டான், மாங்குளம், மல்லாவி ஐயன்குளம், புதுக் பக்கம் 02




போதைப்பொருள் எதிர்ப்பு தொடர்பில் விழிப்புணர்வு எழுத்தாக்கத்திற்கான மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் 2021இற்கான விருதினை யாழ்.தினக்குரல் உதவி ஆசிரியர் பெற்றுக்கொண்டபோது... (30)

# கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றால் விதிக்கப்பட்ட தடையுத்தரவு நீடிப்பு



கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தடையுத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது. குறித்த தடையுத்தரவினை மீள் பரிசீலிப்பதற்கான நகர்த்தல் பத்திரம் நேற்றைய தினம் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணை நேற்று சுமார் 3 மணிநேரம் இடம்பெற்றது. இதன்போது இரு தரப் பக்கம் 02

# வீரத் தமிழனின் பிறந்தநாள்

## -விக்னேஸ்வரன் எம்.பி.-

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

'இந்தியாவிற்கு ஆற்றிய சேவையின் நிமித்தம் நேதாஜி என்றென்றும் சிரஞ்சீவியாக மக்கள் மனதில் வாழ்வார்' என்ற காந்திஜியின் வாசகங்களை இலங்கையில் வடக்கு, கிழக்கை மையமாக வைத்து அங்கு உதித்த வீரத் தமிழனின் இன்றைய பிறந்தநாள் அன்று அவர் ஞாபகார்த்தமாக இந்த சபையில் சமர்ப்பிக்கின்றேன் என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் யாழ்.மாவட்ட எம்.பி.யும் நீதியரசருமான பக்கம் 02

## -நாட்டில் பாரதூரமான பிரச்சினை-

# எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பதை தடுங்கள்

### -அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத் தலைவர்-

க.பிரசன்னா

நாட்டில் இடம்பெறும் எரிவாயு சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்கள் பாரதூரமான பிரச்சினை எனவும் இப்பிரச்சினையை உடனடியாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

எரிவாயுவின் தரம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். இவ்விடயம் குறித்து அரசாங்கத்திடம் எவ்விதமான அறிவும் இல்லை. அண்மையில் இடம்பெற்ற எரிவாயு சிலிண்டர் வெடிப்புகள் பக்கம் 02

# இதுவரை 6 வெடிப்புகள் யுவதி பலி; நால்வர் காயம்



க.பிரசன்னா

நாட்டில் தொடர்ச்சியாக எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பவங்கள் பதிவாகும் நிலையில் இம்மாதத்தில் இதுவரையான காலப்பகுதியில் ஐந்து எரிவாயு சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன் இவ்வருடத்தில் ஆறு சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நிக்கவரெட்டிய கந்தேகெதர பகுதியிலுள்ள வீடொன்றில் வெள்ளிக்கிழமை எரிவாயு பக்கம் 02

# அறிவித்தது போன்று நடைபெறும் எல்லோரும் அஞ்சலிப்பார்கள்

## -நீதிமன்றம் தடுத்தது போன்று தெரியவில்லை-மாவை

மாவீரர்களுக்கான அஞ்சலி நிகழ்வுகள் அறிவித்தது போன்று நடைபெறும். எல்லோரும் அஞ்சலி செய்வார்கள் நீதிமன்றம் தடுத்தது போன்று தெரியவில்லை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி நீதிமன்றினால் மாவீரர் நினைவேந்தலிற்கு வழங்கப்பட்ட தடையுத்தரவு தொடர்பில் நேற்று நகர்த்தல் பிரேரணையின் வழக்கு முடிவில் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நீதிமன்றின் முடிவு என்பது அஞ்சலி செய்வதற்கு ஆதரவான தீர்ப்புதான். ஆனால் ஏனைய நீதிபதி பக்கம் 02

# கலவை மாற்றத்தால் எரிவாயு சிலிண்டர்கள் வெடிக்கவில்லை

## -இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண-

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

கலவையில் ஏற்பட்ட மாற்றத்தால் எரிவாயு சிலிண்டர்களில் வெடிப்பு ஏற்படவில்லை. இதனை மொரட்டுவ பல்கலைக்கழகம் ஆராய்ந்து உறுதிப்படுத்தியிருப்பதாக கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.



வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் நடைபெற்ற வர்த்தக அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனை தெரிவித்தார்.

எரிவாயு சிலிண்டர் பக்கம் 02

## -பண்டிகைக் காலங்களில்-

# தொற்றை குறைக்க தற்காலிக திட்டம்

க.பிரசன்னா

நாட்டில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் தொடர்ச்சியாக அதிகரிப்பு ஏற்பட்டு வரும் நிலையில் பண்டிகைக் காலங்களில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்காமல் இருப்பதற்கு தற்காலிக திட்டம் அவசியமென இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுவது தொடர்பாக அதிகாரிகளினால் தொடர்ச்சியாக வலியுறுத்தப்படுவதனால் எவ்விதமான கட்டுப்பாடுகளுக்கும் அதிகாரிகள் செல்லாத வகையில் பொதுமக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

நாட்டில் தற்போது தினசரி 700க்கும் அதிகமான தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதுடன் தினசரி 20 - 30 வரையான மரணங்களும் பதிவு செய்யப்படுகின்றன. கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் தற்போது தொற்றாளர் பக்கம் 02

# விடுதலைப்புலிகள் நடைமுறை அரசை கட்டியெழுப்பியது கிளிநொச்சியிலேயே

## -நீதிமன்ற தீர்ப்பு மக்களை கவலை கொள்ள வைத்துள்ளது-சிவாஜி

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் நடைமுறை அரசை கட்டியெழுப்பிய கிளிநொச்சியிலே, இன்றைக்கு (நேற்று) நீதிவான் நீதிமன்ற நீதிபதி வழங்கி தீர்ப்பு எங்கள் மக்களை கவலை கொள்ள வைத்துள்ளது என எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி நீதிமன்றினால் மாவீரர் நினைவேந்தலிற்கு வழங்கப்பட்ட தடையுத்தரவு தொடர்பில் நேற்று நகர்த்தல் பிரேரணையின் வழக்கு முடிவில் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் நடைமுறை அரசை கட்டியெழுப்பிய கிளிநொச்சியிலே, இன்றைக்கு நீதிவான் நீதிமன்ற நீதிபதி வழங்கி தீர்ப்பு எங்கள் மக்களை கவலை கொள்ள வைத்திருக்கின்றது.



கட்டளையை தான் மீளப்பெற முடியாதென்றும் ஆனால், ஒரு சில திருத்தங்களுடன் குறிப்பாக கோவில்களிலும், தேவாலயங்களிலும் வழிபடலாம் அன்னதானம் கொடுக்கலாம் என்ற மாதிரியான சொல்லப்பட்டிருக்கிறதேயன்றி, பொது இடத்தில் செய்ய முடியாது என்று சொல்லியிருக்கின்றார்கள். 3 மணிநேரம் எமது சட்டத்தரணிகள் தொடர்ந்து எங்களுடைய சமர்ப்பணங்களை சமர்ப்பித்தும், பொலிஸார் தரப்பின் சமர் வாதாடி பல சமர்ப்பணங்களிற்கு எதிர் தரப்பு சமர்ப்பணங்களை சமர்ப்பித்து வாதாடி, பல நீதிமன்றங்கள் குறித்த விடயங்கள் சொல்லப்பட்டும் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது என அவர் தெரிவித்தார்.(55)

### சபையில் பிரபாகரனுக்கு ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.யான சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கமத்தொழில் அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சு உள்ளிட்ட 3 இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், தமிழினத்தின் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு எனது பிறந்த நாள் வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். சங்க காலத்து மன்னர்களைபற்றி நாம் படித்திருக்கின்றோம். ஆனால் இந்தக்காலத்தில் அவர் எங்களுக்கு முன் வாழ்ந்து காட்டிய மிகப்பெரும் தலைவன். அவருக்கு எனது பிறந்த நாள் வாழ்த்துக்கள் என்றார்.

### இதுவரை 6 வெடிப்புகள் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கசிவினால் வெடிப்புச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் வீட்டிலுள்ள அனைவரும் வெளியில் சென்றிருந்ததால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நிக்கவரெட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பொலனறுவை வெலிகந்த பகுதியிலுள்ள வீடொன்றில் ஏற்பட்ட எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த 19 வயதுடைய பெண்ணொருவர் நேற்று உயிரிழந்துள்ளார். நவம்பர் 13ஆம் திகதி தீக்குச்சியினால் எரிவாயு அடுப்பினை பற்றவைக்க முற்பட்ட போது அது வெடித்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நாட்டில் இதுவரை ஆறு எரிவாயு சிலிண்டர் வெடி விபத்து சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இம்மாதம் மாத்திரம் ஐந்து சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கடந்த 4ஆம் திகதி வெலிகம, கப்பரதொட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் வாயு கசிவு காரணமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் இருவர் காயமடைந்திருந்தனர்.

கடந்த 16ஆம் திகதி இரத்தினபுரி பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்து எரிவாயு கசிவு காரணமாக ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. கடந்த 20 ஆம் திகதி கொழும்பு 7 குதிரை பந்தயத் திடல் அருகில் உள்ள உணவகம் ஒன்றில் எரிவாயு கசிவு காரணமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் இருவர் காயமடைந்திருந்தனர். கடந்த 25 ஆம் திகதி பன்னிப்பிட்டிய கொட்டாவ பகுதியிலுள்ள வீடொன்றில் ஏற்பட்ட எரிவாயு சிலிண்டர் வெடிப்பில் வீடு பலத்த சேதமடைந்திருந்தது.

லிட்ரோ எரிவாயு கலவையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவே வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெறுவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் லிட்ரோ நிறுவனமும் அரச பகுப்பாய்வு திணைக்களமும் குற்றச்சாட்டை நிராகரித்துள்ளன. இதேவேளை லாஃப் எரிவாயு சிலிண்டர்கள் மிகவும் பாதுகாப்பானவையாக இருப்பதாகவும் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்றுள்ளதாகவும் லாஃப் எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது.

### நினைவேந்தலை ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடியிருப்பு ஆகிய ஏழு பொலிஸ் நிலையங்களால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததற்கு அமைவாக குறித்த எழுபத்திரெண்டு பேருக்கு தடை உத்தரவுகள் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் தடைக்கட்டளைகளில் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தவர்களில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா, கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன், புதுக்குடியிருப்புப் பிரதேசசபை உறுப்பினர் சிவபாதம் குகநேசன், சமூகசெயற்பாட்டாளர் தம்பையா யோகேஸ்வரன் ஆகியோர், மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுக்கான தடை உத்தரவை நீக்குமாறு நேற்று நகர்த்தல்பத்திரம் ஊடாக நீதிமன்றினைக் கோரியிருந்தனர்.

இந் நிலையில் பிரதிவாதிகள் சார்பில் முன்வைக்கபபட்ட கோரிக்கையினை ஆராய்ந்த நீதிபதி ரி.சரவணராஜா, தடைசெய்யப்பட்ட இயக்கமொன்றின் நிகழ்வினை நினைவுபடுத்தக்கூடியதாக நினைவுகூரல்களை மேற்கொள்ளமுடியாதெனவும், இறந்தவர்களுக்கு பொதுவான நினைவுகூரல்களை மேற்கொள்ளமுடியுமெனவும் மாவீரர் நாள் தடைக்கட்டளையினைத் திருத்தியமைத்துக் கட்டளை பிறப்பித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து 6.11.2021 நேற்று நினைவேந்தல் செயற்பாடுகளைத் தடைசெய்யுமாறு பொலிசார் நகர்த்தல்பத்திர மூடாக நீதிமன்றினைக் கோரியிருந்தனர்.

இந் நிலையில் பொலிசாரின் குறித்த கோரிக்கையினை நீதிமன்று மறுத்ததுடன், 25.11.2021 அன்று வழங்கிய திருத்திய கட்டளையை தொடர்ந்தும் நீடித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.(56)

### வீரத் தமிழனின் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கமத்தொழில் அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சு உள்ளிட்ட 3 இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

இவ்வாரம் வட,கிழக்கு தமிழ் மக்களுக்கு ஒரு முக்கிய வாரம். வீரமரணம் அடைந்த மாவீரரை நினைவுறுத்தும் வாரம். அதுவும் இன்றைய தினம் இவ்வாரத்தினுள் அதி விசேட தினம். இத்தருணத்தில் பிரிட்டிஷாருக்கு எதிராக ஆயுதம் தாங்கிய சுபாஷ் சந்திர போஸ் பற்றி அஹிம்சாவாதியான மகாத்ம காந்தி அவர்கள் கூறிய வாசகங்கள் சிலவற்றை உங்களுக்குநினைவுறுத்த விரும்புகின்றேன்.

'நேதாஜியின் தேசப்பற்று எவர்க்கும் குறைந்ததல்ல. அவரின் வீரம் அவரின் சகல காரியங்களிலும் பளிச்செனப் பிரதிபலிக்கின்றன. அவர் உன்னத குறிக்கோள்களை முன்வைத்தார். ஆனால் தோல்வியுற்றார். ஆனார் யார் தான் தோல்வியைத் தழுவாதவர்கள்?' இன்னொரு சந்தர்ப்பத்தில் காந்தியவர்கள் பின்வருமாறு கூறினார்கள். 'இந்தியாவிற்கு ஆற்றிய அவரின் சேவையின் நிமித்தம் நேதாஜி என்றென்றும் சிரஞ்சீவியாக மக்கள் மனதில் வாழ்வார்'

அஹிம்சையின் பால் ஈர்க்கப்பட்டவன் என்ற முறையில் மேற்கண்ட காந்திஜியின் வாசகங்களை இலங்கையில் வடக்கு, கிழக்கை மையமாக வைத்து அங்கு உதித்த வீரத் தமிழனின் இன்றைய பிறந்தநாள் அன்று அவர் ஞாபகார்த்தமாக சமர்ப்பிக்கின்றேன் என்றார்.

### பாரிய சமூக மாற்றத்துக்காக ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதைப்பொருள் தடுப்பு தொடர்பான மாநாட்டின் போது உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் கடந்த 2010 ஆண்டுக்குப் பின்னர் புதிய புகையிலைக்கம்பனிகள் படையெடுத்திருந்தன. அதேவேளை 2011 பின்னரான காலப் பகுதியில் மதுசாரக் கம்பனிகளும் காலூன்றி சமூகத்துக்குள் ஊடுருவி பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தின.

இவ்வாறான கம்பனிகளுக்கெதிராக செயற்பட்டு பல்வேறு வெற்றிகளை யாழ். மாவட்டத்தில் நாம் கண்டடைந்துள்ளோம்.

குறிப்பாக 2010 முதல் இன்றுவரை யாழ். மாவட்டத்தில் 1800 கடைகள் புகையிலை, போதைப் பொருட்கள் விற்பதனை நிறுத்தியிருக்கின்றனர்.

அதற்கும் அப்பால் 4 உள்ளூராட்சி மன்றங்கள் போதைப்பொருள் தடுப்பு சட்டங்களை உருவாக்கி தமது ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் நடைமுறைப்படுத்தியுள்ளன.

இதனால் யாழ்.மாவட்டத்தில் பாரிய நட்டத்தை புகையிலை கம்பனிகள் சந்தித்தன. இதன் நட்டத்தை ஈடு செய்யும் முகமாக அபிஷேகம் எனும் விளம்பர உக்தியினை கையாண்டு புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்யும் இடங்களை இனம் காட்டுவதற்கான விளம்பர உத்தியை புகையிலை கம்பனிகள் முன்னெடுத்த போதும் அதனை யாழ்.மாவட்ட சுகாதாரத்துறையும் ஊடகங்களும் கடுமையாகப் போராடி நிறுத்தியமை பாராட்டுக்குரியது.

இவ்வாறு போதைப் பொருட்களிலிருந்து இன்று சமூகம் மாற்றம் கண்டு வருகின்றமை மகிழ்ச்சிக்குரியது. ஆனால் இந்த மாற்றத்தை பாரிய சமூக மாற்றமாக்கும் சக்தி ஊடகங்களின் கைகளிலேயே உள்ளது.

இதனை உணர்ந்து ஊடகங்கள் வடக்கின் சமூக மாற்றத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட முன்வர வேண்டும் என்றார்.(30)

# இந்து மத குருவை காணவில்லை

கடந்த 18ஆம் திகதி வீட்டிலிருந்து வெளியே சென்ற தலவாக்கலை நகரை வசிப்பிடமாக கொண்ட இந்து மத குருவான சி.முத்துசாமி ஐயர் (வயது 72) என்பவர் இன்று வரை வீடு திரும்பாத நிலையில் இவரை கண்டால் உடனே தகவல் வழங்குமாறு குடும்பத்தார் கேட்டுள்ளனர்.

இவர் காணாமல்போன இரண்டு தினங்களில் தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் மகனால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தன்னுடைய தந்தை தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் உடனடியாக தனது 076 6940905, 076 6184984 தொலைபேசி இலக்கங்களுக்கு தகவல் தருமாறும் கோரியுள்ளார்.

### கொரோனா பலி ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14,258 ஆக அதிகரித்துள்ளது.

### இன்று மாவீரர் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, பொது வெளியில் ஒன்றுகூடாமல் மாவீரர் நினைவுகூரல்களை தமிழர் தாயகம் எங்கும் மக்கள் கொரோனாபாதிப்புக்களை கவனத்தில் எடுத்து பாதுகாப்புடன் முன்னெடுக்குமாறு அரசியல் கட்சிகள் கோரியுள்ளன.

வழக்கம்போல மாலை 6.05 மணிக்கு மாவீரர்களை தமது வசதிக்கு ஏற்ற வகையில் நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்துமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.(30)

### எரிவாயு சிலிண்டர்கள் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் கடுமையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்த விவகாரம் குறித்து வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டும். எரிவாயு பிரச்சினையை முன்வைத்து தொழிற்சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவினர்சனிக்கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இந்த விடயத்தை மறுப்பதற்காக அரசாங்கம் இரண்டு பேரை பயன்படுத்தியுள்ளது. குடிமக்களின் உயிருக்கு அரசாங்கம் எப்படி பொறுப்பேற்கிறது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளதுடன் இது ஒரு பாரதூரமான பிரச்சினை எனவும் இந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். சர்வதேச எரிவாயு இடையே உள்ள வேறுபாடுகள் மற்றும் பயனாளிகளுக்கு என்ன விளைவுகளை ஏற்படுத்துகிறது என்பது தொடர்பாக எந்த வேலைத்திட்டமும் இல்லை. எரிவாயுவின் தரம் குறித்து ஆய்வு செய்ய வேண்டிய நேரம் இதுவாகும். ஏனெனில் இந்தப் பிரச்சினை தொடர்பான எந்த அறிவும் அரசாங்கத்திற்கு இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

### கிளிநொச்சி நீதிவான் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பினருக்கும் இடையில் வாத பிரதிவாதங்கள் இடம்பெற்றது.

வழங்கப்பட்ட கட்டளை சட்டத்திற்கு அமைவாக வழங்கப்பட்டிருக்கிறது என்ற கருத்தை தெரிவித்துள்ள நீதிவான், அதை இரத்து செய்யவோ அல்லது மாற்றியமைக்கவோ வேண்டிய தேவை இருப்பதாக தான் கருதவில்லை என்று தீர்ப்பளித்துள்ளார்.

இந்த நிலையில் மத அனுஸ்டானங்களை மக்கள் வணக்க ஸ்தலங்களில் மேற்கொள்வதற்கு எந்த தடையும் இல்லை என்ற வகையிலான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் எதிர் தரப்பினர் சார்பில் சிரேஸ்ட சட்டத்தரணி சிறிகாந்தா மற்றும் சுகாஸ் உள்ளிட்ட சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தனர்.

இதேவேளை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம்.கே சிவாஜிலிங்கம், கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன், பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் மன்றில் தோன்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(55)

### அறிவித்தது போன்று ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் தீர்மானித்தது போன்றதற்கு மாறாக அமைந்திருப்பது போல தெரிகின்றது.

அதற்கான சரியான பதிலை சட்டத்தரணி சிறிகாந்தா தருவார். நாங்கள் ஏற்கனவே அறிவித்தது போன்று நடைபெறும். எல்லோரும் அஞ்சலி செய்வார்கள். அஞ்சலி நடைபெறும். அதனை தடுப்பதற்கு அல்ல. அவரது தீர்ப்பினடிப்படையில் அதனை தடுக்கவில்லை என்றுதான் கருதுகின்றேன் என அவர் தெரிவித்தார்.(55)

### தொற்றைக் குறைக்க ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு மற்றும் அரசாங்கத்தின் நடவடிக்கையின் மூலம் நாட்டில் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வதற்கு தகுதியான 84 வீதமானோருக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. இப்போது பூஸ்டர் தடுப்பூசிகள் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை நாட்டில் 60 வயதுக்கும் மேற்பட்ட பலரில் குறிப்பிட்ட சதவீதத்தினர் இன்னும் தடுப்பூசியின் ஒரு டோஸை கூட பெற்றுக்கொள்ளவில்லை. பல விழிப்புணர்வு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதும் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் ஆர்வம் காட்டவில்லை. தற்போது பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்படும் நிலையிலும் அவற்றை பெற்றுக்கொள்பவர்களின் எண்ணிக்கையும் குறைவாகவே உள்ளது. அவற்றை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

### கலவை மாற்றத்தால் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் தொடர்பில் சமூகத்தில் பேசப்பட்டு வரும் பிரச்சினைகள் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண இக்குழுக்கூட்டத்தில் குறிப்பிட்டார்.

கலவையில் ஏற்பட்ட மாற்றத்தால் எரிவாயு சிலிண்டர்களில் வெடிப்பு ஏற்படவில்லையென்றும்,இதனை மொரட்டுவ பல்கலைக்கழகம் ஆராய்ந்து உறுதிப்படுத்தியிருப்பதாகவும் தெரிவித்தார். புதிய 18 லீற்றர் எரிவாயு சிலிண்டரை இடைநிறுத்தவும் லிட்ரோ நடவடிக்கை எடுத்துள்ளது. எனவே எரிவாயுஇணைப்புகள் தொடர்பில் நிலவும் பொய்யான கருத்தாக்கங்கள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மேலும், லங்கா சதோசவின் புதிய கிளைகளை நிறுவுதல், அலங்கார மீன் வளர்ப்பைஊக்குவித்தல் மற்றும் ஏற்றுமதி செய்தல் மற்றும் பச்சைப் பயறுகளை அரசாங்கத்தினால் கொள்வனவு செய்தல் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான ரோஹன திஸாநாயக்க, ஜகத்புஷ்பகுமார, அமரகீர்த்தி அத்துகோரள, கீதா சமன்மலி குமாரசிங்க, அஜித் ராஜபக்ஷ மற்றும் கலாநிதி கயாஷான் நாவானந்த ஆகியோர் கலந்துகொண்டனர்.

### புலிகளின் தலைவர் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள் அவரது உருவ படத்திற்கு முன்பாக கேக் வெட்டி பிறந்த நாளை கொண்டாடியுள்ளனர்.

அதேவேளை மாவீரர் வாரம் அனுஸ்டிக்கப்பட்டு வரும் நிலையில், யாழ்.பல்கலை கழக சூழல் உள்ளிட்ட பகுதிகளில் ஆயுதங்களுடன் இராணுவத்தினர் ,பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளதுடன் , புலனாய்வாளர்களின் கண்காணிப்பும் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில் , பல்கலைக்கழகத்தினுள் மாணவர்கள் கேக் வெட்டி பிறந்தநாளை கொண்டாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(40)

# மக்கள் மீது இராணுவ பலத்தை பாவிப்பதற்கா இந்தளவு செலவு

## -யாழ்.மாவட்ட எம்.பி. விக்னேஸ்வரன் கேள்வி-

பா. கிருபாகரன் -
ந. ஜெயகாந்தன்



மக்கள் இந்த அரசை வெறுக்கத் தொடங்க மேலும் மேலும் இராணுவ பலத்தைப் பாவிப்பதற்காகவா இந்தளவு பாரிய தொகையை படையினர் சார்பில் செலவிடுகின்றீர்கள் எனக் கேள்வி எழுப்பிய தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் யாழ்.மாவட்ட எம்.பி.யும் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன், நாட்டில் சமாதானமும் சுபீட்சமும் ஏற்பட வேண்டுமானால் 'ஒரு நாடு ஒரு சட்டம்' என்று கூறித் திரிந்தால் அது ஏற்படாது என்றும் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கமத்தொழில் அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சு உள்ளிட்ட 3 இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

அண்மையில் ஜனாதிபதியால் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது. அதில் சேதன உரத்துக்கு மட்டுமே அரச நிவாரணங்கள் இனி கிட்டும் என்று குறிப்பிட்டிருந்தது-அதோடு சேர்ந்து மேலும் ஒரு செய்தி வெளிவந்தது. அசேதன அல்லது இரசாயன உரங்களை இனி யாரும் இறக்குமதி செய்யலாம் ஆனால் அவற்றைப் பாவிக்கும் விவசாயிகளுக்கு அரசின் மானிய உதவிகள் கிடைக்க மாட்டா என்பதே அது.விவசாயிகளினதும் பொது மக்களினதும் ஆர்ப்பாட்டங்களின் பின்னர் இரசாயன உரங்களை இறக்குமதி செய்யலாம் அவற்றை அனுமதிக்கின்றோம் என்று கூற வந்த அரசாங்கம் அதனை வெளிப்படையாகக் கூறாது சேதன உரத்துக்கு மட்டுமே அரச நிவாரணங்கள் கிட்டும் என்று மறைமுகமாகக் கூற வந்ததின் நோக்கம் என்ன ?

அது மட்டுமல்லாமல் தற்போது களை கொல்லிகள், கிருமிநாசினிகளையும் இறக்குமதி செய்ய அரசாங்கம் இடமளித்துள்ளது. இவற்றை முன்னரே ஆராய்ந்தறிந்து உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்திருக்கலாம். மக்களுக்கு மன உளைச்சல்களை ஏற்படுத்திய பின்னரே இவற்றைச் செய்வோம் என்று அரசாங்கம் கூறுமாப் போல் இருக்கின்றது .

இவ்வாறான அரசாங்கத்தின் நிச்சயமற்ற செயல்களால் பாதிக்கப்பட்டிருக்கும் விவசாயிகளுக்கு வரும் தைப்பொங்கல் காலத்தில் நட்டஈடு வழங்கப்படுமா ?

அடுத்து படையினருக்கு போர் முடிந்த பின்னரும் வருடாவருடம் கூடிய நிதிகளை வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கிவருவது எதற்காக ?. மாலைதீவோ இந்தியாவோ எமக் கெதிராகத் தாக்குதல்களை மேற்கொள்ள மாட்டா. நீங்கள் இந் நாட்டின் சிங்கள ,தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய இனமக்களுக்கு எதிராகத் தான் படையினரைப் பாவிக்கப் போகின்றீர்கள். மக்கள் உங்களை வெறுக்கத் தொடங்க மேலும் மேலும் இராணுவ பலத்தைப் பாவிப்பதற்காகவா இந்தளவு பாரிய தொகையை படையினர் சார்பில் செலவிடுகின்றீர்கள்?இந்தத் தொகைகளில் ஒரு பகுதியையாவது எங்கள் பிறநாட்டுக் கடன்களை அடைக்கப் பாவிக்கலாம் என்று உங்களுக்குத் தோன்றவில்லையா? 308 பில்லியன் ரூபா ஒரு சிறிய நாடான இலங்கையின் பாதுகாப்புக்கு பாவிக்க முனைவது வியப்பை அளிக்கின்றது.

அண்மையில் அரசாங்க ஊழியர்கள் எமது நிதியில் பெரும் பங்கை எடுத்துவிடுகின்றார்கள் என்று நிதி அமைச்சர் கூறியிருந்தார். இது தவறு. படையினர் தான் எமது வருமானத்தில் கூடிய பங்கை விழுங்கி வருகின்றார்கள்.

இந்த வரவு-செலவுத்திட்டத்தால் வட,கிழக்கு தமிழ் மக்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கவில்லை. போரால் பாதிக்கப்பட்ட மக்களின் குறை தீர்க்க எந்த ஒரு திட்டமும் வகுக்கப்படவில்லை.நாட்டில் சமாதானமும் சுபீட்சமும் ஏற்பட வேண்டுமானால் 'ஒரு நாடு ஒரு சட்டம்' என்று கூறித் திரிந்தால் அது ஏற்படாது. சுய நிர்ணய உரிமைக்குரியவர்களுக்கு சமஷ்டி முறையான ஒரு அரசியல் யாப்பை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களையும் சமமான முறையில் வரவேற்றால் தான் சமாதானமும் சுபீட்சமும் உதயமாகும் என்பதை மறக்காதீர்கள் என்றார்.

# சிலிண்டர்கள் வெடிப்பதை தடுக்கும் முறைகள்

நாட்டில் பல இடங்களில் தற்போது எரிவாயு சிலிண்டர் வெடிப்புக்குள்ளாகுவதனை தடுப்பதற்கான வழிமுறைகள் வெளியாகியுள்ளது. தரம் குறைந்த உதிரிப்பாகங்களின் பயன்பாட்டால் அல்லது தவறான செயற்பாடுகளால் வீடுகளில் கசிவு ஏற்பட்டால் முதலில் துர்நாற்றம் வீசும் அந்த நேரத்தில் வீடுகளில் எந்த ஒரு மின் சாதனங்களையும் இயக்குவதை தவிர்க்க வேண்டும்.

பின்னர் எரிவாயு சிலிண்டரை கழற்றி வீட்டின் வெளியே வைக்கவேண்டும்.

இப்படி கழற்றி வெளியே கொண்டு செல்லும் போது சிலிண்டரை சாய்க்காமல் நேராக நிலைக்குத்தாக பிடித்து கொண்டு செல்ல வேண்டும்.

வெளியே ஆள் நடமாட்டமில்லாத இடத்தில் கொண்டு சென்று வைக்கவேண்டும். எரிவாயு சிலிண்டர் வெளியே வைக்கப்பட்ட இடத்தின் அருகில் யாரையும் செல்ல அனுமதிக்கவேண்டாம். காரணம் அந்த இடத்திற்கு தொலைபேசியுடன் ஒருவர் சென்றால் கூட அது ஆபத்தானது. ஆகவே யாரையும் அந்த இடத்திற்கு அனுமதிக்காது உடனே சம்பந்தப்பட்ட எரிவாயு நிறுவனத்தின் வாடிக்கையாளர் சேவைக்கு தொடர்புகொண்டு அவர்களுக்கு விடயத்தை சொல்லி தெளிவுபடுத்தவேண்டும்.

அதன் பின்னர் அவர்கள் உங்களுக்கு என்ன செய்யவேண்டும் என்பதை தெளிவுபடுத்துவார்கள். நீங்கள் முதலில் செய்ய வேண்டியது மின்சாரத்துடன் தொடர்புடைய எந்த நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது. அடுத்தது எரிவாயு சிலிண்டரை வெளியே பாதுகாப்பான இடத்திற்கு நேராக தூக்கிச்சென்று வைப்பது இப்படி செய்வதால் வெளியில் எரிவாயு கசிவு ஏற்பட்டாலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது.

# பங்காளிகளின் மோதல் திசை திருப்பும் நாடகம்

## -சந்தேகம் தெரிவிக்கும் நளின் பண்டார எம்.பி.-

பா.கிருபாகரன்,
ந.ஜெயகாந்தன்

விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்க்க முடியாது, மக்களை திசை திருப்பும் நோக்கில் விவசாய அமைச்சரும், முன்னாள் ஜனாதிபதியும் சண்டையிடுவதை போன்று நடிக்கின்றார்களா? என்ற சந்தேகங்கள் காணப்படுவதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் கமத்தொழில் அமைச்சு , நீர்ப்பாசன அமைச்சு உள்ளிட்ட நான்கு அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான விவாதத்தை ஆரம்பித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், விவசாய அமைச்சர் மே மாதத்தில் இரசாயன உரம் உள்ளிட்ட பொருட்களின் இறக்குமதிக்கு தடைவிதித்து வர்த்தமானி வெளியிடப்பட்டது. இந்நிலையில் அந்த வர்த்தமானிகள் தற்போது வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு வாபஸ் பெற்றுக்கொள்வதன் ஊடாக மாத்திரம் உரம் வானில் இருந்து கொட்டாது. 6 இலட்சம் ஹெக்டேயர் விவசாய நிலங்கள் களைநாசினிகள் இன்றி உள்ளன.இதேவேளை உரத்தை கொண்டு வருவதற்கான உரிமையை தனியார் நிறுவனங்களுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளன. இவர்கள் ஊடாக வருவதற்கு குறிப்பிட்ட காலம் எடுக்கும். அத்துடன் உர மூடை எவ்வளவு ரூபாவுக்கு சந்தைக்கு வரும் என்றும் கூற வேண்டும். உங்களின் சௌபாக்கிய நோக்கில் இலவசமாக உர மூடையை வழங்குவதாக கூறினீர்கள். ஆனால் அவ்வாறு மக்களுக்கு கிடைக்கப் போவதில்லை. அதேபோன்று எப்படி உரத்தை இறக்குமதி செய்யப் போகின்றீர்கள் என்பதற்கான பதிலும் இல்லை.

நீங்கள் கடந்த காலங்களில் எடுத்த தவறான தீர்மானங்களால் விவசாயிகளின் நிலைமை சட்டியில் இருந்து அடுப்பினுள் விழுந்த கதையாகிவிட்டது. உங்களின் வர்த்தமானியை வாபஸ் பெற்றாலும் உரத்தை கொண்டு வருவதற்கான தாமதத்திற்கு தீர்வு என்ன என்று கூற வேண்டும்.

தற்போது இங்கு நனோ யூரியா கொண்டு வரப்பட்டுள்ளன. இதனை செயன்முறை இன்றியே இங்கு பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் விவசாயிகளுக்கு எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை.

விவசாய அமைச்சர் முன்னாள் ஜனாதிபதி ஆகியோருக்கு இடையிலான பிரச்சினை நீங்களே தீர்த்துக்கொள்ள வேண்டியதே. இதனால் நாங்கள் உட்சாகமடையலாம் ஆனால் இந்த பிரச்சினையால் விவசாயிக்கு ஒன்றும் கிடைக்கப் போவதில்லை.

இந்நிலையில் விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பதிலாக நாட்டின் கவனத்தை வேறுபக்கத்திற்கு திருப்புவதற்காக கதைத்துக்கொண்டு திருடன் பொலிஸ் விளையாட்டைப் போன்று இவர்கள் இப்படி அடித்துக்கொள்வதை போன்று வெளியில் காட்டுகின்றார்களாக என்ற சந்தேகங்களும் காணப்படுகின்றன.

இவ்வாறு இருக்காது விவசாயிகளுக்கு வழங்கிய வாக்குறுதிகளை வழங்குமாறும் மற்றும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடுகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்கின்றேன் என்றார்.

# நடமாடும் சேவை மூலம் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றல்

## -மாத்திரையையும் தருவிக்க ஜனாதிபதி ஆலோசனை-



கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான இரண்டாவது டோஸ் தடுப்பூசியை ஏற்றி மூன்று மாதங்கள் கடந்த 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், நடமாடும் சேவை மூலம் மூன்றாவது டோஸ் (Booster) தடுப்பூசியை ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு, சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கினார்.

வெள்ளிக்கிழமை முற்பகல் கூடிய கொவிட் தடுப்புச் செயலணிக் கூட்டத்தின் போதே, ஜனாதிபதி இந்த ஆலோசனையை வழங்கினார்.

வைத்தியசாலைகளுக்கு கிளினிக் செல்லும் 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், அந்த சிகிச்சையகத்தில் வைத்தே இந்த பூஸ்டர் தடுப்பூசியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான இரண்டாவது டோஸ் தடுப்பூசியைச் செலுத்தி ஒரு மாதம் கடந்த, தொற்றா நோய்களுக்கு இலக்காகியுள்ள 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், மூன்றாவது டோஸ் தடுப்பூசியை செலுத்தவும் தீர்மானிக்கப்பட்டது. இதன் பிரகாரம், புற்று நோயாளிகள், புற்று நோய்க்கு சிகிச்சை பெறுவோர், உறுப்பு மாற்று சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டோர், இரத்தமாற்று செய்யப்பட்ட நோயாளிகள், தொற்றா நோய் காரணமாக நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்த அனைவருக்கும், விசேட வைத்திய பரிந்துரைக்கமைய மூன்றாவது டோஸ் தடுப்பூசி செலுத்தப்படவுள்ளது.

உரிய சிகிச்சையகங்கள் (கிளினிக்) அல்லது சனிக்கிழமை நாட்களிலும், இத்தரப்பினருக்கான மூன்றாவது தடுப்பூசி ஏற்றல் பணிகள் முன்னெடுக்கப்படும் என்று, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

கொவிட் நோயாளிகளுக்காக, பிரித்தானியா உள்ளிட்ட சில நாடுகளில் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் மோல்னுபிரவீர் வில்லை (Molnupiravir Capsule) பெற்றுக்கொடுப்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. அத்துடன், கொவிட் வைரஸுக்கு எதிரான தடுப்பூசிகளை நாட்டுக்குக் கொண்டுவந்தது போன்றே, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் ஊடாக இந்த வில்லைகளையும் நாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு, இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமனவுக்கு, ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

# எனது கையடக்க தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுகேட்கப்படுகின்றன

## -முஜிபுர் ரஹ்மான் எம்.பி.-

குற்றப்புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்தின் அனுமதியின்றி தமது கையடக்க தொலைபேசி உரையாடல்களை செவிமடுப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் பேசுகையில்:

2015 ஆம் ஆண்டில் இருந்து தற்போது வரை பயன்படுத்தும் தொலைபேசி இலக்கத்தை தனக்கு பெற்றுக்கொடுத்த தனது நண்பரிடம் பயங்கரவாத தடுப்பு விசாரணைப் பிரிவினால் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. தனது தொலைபேசி அழைப்புகள் தொடர்பில் அவரிடம் மிக நீண்ட நேரம் விசாரணை இடம் பெற்றுள்ளது. இதன் மூலம் தனது தொலைபேசி அழைப்புகள் பயங்கரவாத தடுப்பு விசாரணைப் பிரிவினால் செவிமடுக்கப்படுவது புலனாகின்றது.

அவ்வாறு செவிமடுப்பதற்கு குற்றவியல் தண்டனைச் சட்டத்தின் 124 ஆவது சரத்திற்கு ஏற்ப, நீதவானின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு எத்தகைய நடைமுறையும் பின்பற்றப்படவில்லை.

இந்த சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் தொடர்புடைய அதிகாரிகள் மற்றும் தொலைபேசி சேவை வழங்குநர்களை பாராளுமன்ற சிறப்புரிமை குழுவிற்கு அழைத்து எனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளமை குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோருகின்றேன் என்றார்.

# புதிய பரீட்சைகள் ஆணையாளராக எல்.எம்.டி. தர்மசேன நியமனம்

கல்வி அமைச்சின் மேலதிக செயலாளராக கடமையாற்றிய எல்.எம்.டி. தர்மசேன புதிய பரீட்சைகள் ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார். பரீட்சைகள் ஆணையாளராக கடமையாற்றிய சனத் பீ. பூஜித் ஓய்வு பெறவுள்ள நிலையில் அப்பதவி வெற்றிடத்திற்கே இலங்கை கல்வி நிர்வாக சேவையின் விசேட தரத்தை சேர்ந்த அதிகாரியன எல்.எம்.டி. தர்மசேன நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பசறை மத்திய கல்லூரியில் ஆசிரியராக அரச சேவையில் இணைந்துகொண்ட நிலையில் ஹங்வெல்ல ராஜசிங்க வித்தியாலயத்தின் பிரதி அதிபராகவும், கொழும்பு ஆனந்தா கல்லூரி மற்றும் மஹானாம கல்லூரி ஆகியவற்றின் அதிபராகவும் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(முன்னர்வந்த செய்தி10பக்கம்.)

# நாளை இரத்ததான முகாம்

இளவாலை புனித யூதாததேயு ஆலய இளையோர் மன்றத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாமொன்று நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது. மேற்படி இரத்ததான முகாம் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை இடம்பெறவுள்ளதாகவும் இதில் குருதிக் கொடையாளர்களை தவறாது கலந்து கொண்டு இரத்ததானப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதே வேளை குருதிக் கொடை வழங்க விருப்பமுள்ளவர்கள்; 0773292326 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

(18)

# அரச பாடசாலைக்கு நான்கு நாள் நத்தார் விடுமுறை



அரச பாடசாலை மாணவர்களுக்கு எதிர்வரும் டிசம்பர் 23 ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை நத்தார் விடுமுறை வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா தெரிவித்துள்ளார். இவ்வாறான நிலையில் டிசம்பர் 27 ஆம் திகதி முதல் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, மேற்படி தினங்களில் சகல கத்தோலிக்க பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்படுமென குறிப்பிடப்படுகின்றது.

# இன்று பாடசாலை நடைபெறமாட்டாது

இன்று சனிக்கிழமை பாடசாலைகள் நடைபெறமாட்டாதென வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் தெரிவித்துள்ளார். சனிக்கிழமைகளில் பாடசாலைகள் நடைபெற்று வந்த நிலையில் இன்று சனிக்கிழமை பதில் பாடசாலை இடம்பெறுமா என்ற சந்தேகம் பெற்றோர் மத்தியில் நிலவுவது குறித்து கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.(21)

## அமைச்சுகளின் செயலாளர்கள் நியமனத்துக்கு அனுமதி

எட்டு அமைச்சுக்களின் செயலாளர்களின் நியமனத்துக்கு பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவில் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க தெரிவித்தார். சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவிலே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்பிளிகேஷன் (பிரைவேட்) லிமிடெட்
இலக்கம் : 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரிய பீடம்:- 0217388301, 0217388302, 0217388303
பக்ஸ்:- 0217388304 விளம்பரம்:- 0217388307, விநியோகம்:- 0217388309
சனிக்கிழமை 27 நவம்பர் Saturday 27 November 2021

# நினைவேந்தல் தடை அடிப்படை உரிமை மீறல்

இன்று மாவீரர் நாள். இலங்கையிலும் உலகெங்கிலும் தமிழர்கள் வாழும் இடங்கள் எங்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து போராடி உயிர்நீத்தோரை உறவுகள் நினைவுகூர்ந்து அஞ்சலிக்கும் நாள்.

ஆனால் முன்னொருபோதும் இல்லாது மாவீரர் நாள் நினைவேந்தல்களை தடுப்பதில் அரசும், அரச படைகளும் இம்முறை கடும் ஒடுக்குமுறைகளை பிரயோகித்து வருகின்றன.

வட,கிழக்கில் மாவீரர் வாரம் ஆரம்பித்த நாள் முதலே போர்க் காலத்தை ஒத்ததாக சந்திக்குச் சந்தி இராணுவம் குவிக்கப்பட்டு, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மாவீரர் துயிலும் இல்லச் சூழல்கள் முற்றுமுழுதாக பாதுகாப்பு வலயம் போன்று படைகளாலும் பொலிஸாலும் முற்றுகையிடப்பட்டுள்ளன.

அத்துடன், நீதிமன்றங்களை அணுகி பொலிஸார் நினைவேந்தலுக்குத் தடை பெற்றுள்ளனர்.

இத்தனை தடைகளையும் மீறி அஞ்சலிப்போர் பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் கொரோனா தனிமைப்படுத்தல் விதிகளைக் காட்டி அச்சுறுத்தப்படுகின்றனர்.

போரில் இறந்தவர்களை நினைவு கூரும் உரிமை சா்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, சர்வதேச அமைப்புக்களால் வலியுறுத்தப்பட்டு வந்தாலும் கூட இலங்கை ஆளும் அதிகார வர்க்கங்கள் அதற்குச் செவி சாய்ப்பதாக இல்லை.

இலங்கையில் கடந்த காலங்களில் பிரிவினைவாதிகளாக, தேசத்துரோகிகளாக அடையாளப்படுத்தப்பட்ட ஜே.வி.பியினர் கடந்த கால கிளர்ச்சிகளின்போது கொல்லப்பட்ட தங்கள் சாகாக்களை நினைவு கூர அனுமதிக்கப்படுகின்றனர்.

இன்னொருபுறம் போரில் இறந்த படையினரின் நினைவாக நினைவுத் தூபிகளை நாடெங்கும் அமைத்து அரசாங்கம் போர் வெற்றி விழா கொண்டாடி வருகிறது.

ஆனால் தமிழ் மக்கள் இறந்த தங்கள் உறவுகளை நினைவு கூர முடியாதவாறு கடும் அடக்குமுறை பிரயோகிக்கப்படுகிறது.

இது நினைவுகூரலில் கூட வெளிப்படுத்தப்படும் அரசின் இனவாதமாகவே கருதப்படுகிறது.

30 வருட கால உள்நாட்டு போரின் பின்னர் இனங்களுக்கிடையில் உறவுகளை கட்டியெழுப்பி நல்லிணக்கத்தை அடையும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக இலங்கை அரசாங்கம் கூறி வருகிறது.

அரசு கூறும் இந்த நல்லிணக்கத்தை நோக்கி நகர வேண்டுமானால் போரில் உயிரிழந்த தமது உறவினரை நினைவு கூர்வதற்கான தமிழர்களின் உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

போரின்போது உயிரிழந்த தமது உறவினரை நினைவுகூரும் அனைத்து உரிமைகளும் அவர்களது உறவுகளுக்கும், சமூகங்களுக்கும் இருக்க வேண்டும் என்பதை ஐ.நா. மற்றும் சா்வதேச மனித உரிமை அமைப்புக்கள் வலியுறுத்துகின்றன.

அத்துடன், போரில் இறந்தவர்களை நினைவு கூரும் உரிமை இறந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவா்களது உறவுகளுக்கும் இருப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் கடந்த காலங்களில் கருத்து வெளியிட்டுள்ளது.

நாட்டின் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு இறந்தவர்களின் குடும்பங்களுக்கு இருக்கின்ற இறந்தோரை நினைவுகூரும் உரிமை மற்றும் அந்த நிகழ்வுகளில் கலந்து கொள்பவர்களின் பாதுகாப்பு ஆகியவை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரான கலாநிதி தீபிக்கா உடகம கடந்த 2009 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ச கடிதம் ஒன்றை எழுதியிருந்தார்.

உயிரிழந்த நபர் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உறுப்பினராக இருந்த காரணத்தை வைத்து நினைவு கூர்வதற்காக உரிமையை மறுப்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல எனவும் அவர் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஆயுதப் போராட்டத்தின்போது உயிர் நீத்த இராணுவத்தினரை நினைவு கூர்வதற்காக நாட்டில் பல நினைவு தூபிகள் அமைக்கப்பட்டுள்ளதையும் அக்கடிதத்தில் நினைவுப்படுத்திய கலாநிதி தீபிக்கா உடகம, அவ்வாறே தமது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினரை நினைவு கூர்வதற்கான உரிமை அனைத்துக் குடிமக்களுக்கும் இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தார்.

உயிரிழந்தவரின் பின்னணி மற்றும் அரசியல் கருத்துக்களுக்கு அப்பாற்பட்டு தமது உறவுகளின் பிரிவை நினைவு கூர்வதற்கான உரிமை அனைத்துக் குடும்பங்களுக்கும் உண்டு.

இந்த உரிமையை மறுப்பது வெறுப்புணர்வுகள் மேலும் வலுவடையவே வழிவகுக்குமே தவிர, நல்லிணக்கத்திற்கு ஒருபோதும் உதவாது.

இதனை அரசு உணர்ந்து எதிர்காலத்தில் தமிழ் மக்களின் மனதை புரிந்து உயிர்நீத்தவர்களை சுதந்திரமாக நினைவுகூர அனுமதிக்கவேண்டும். இல்லையேல் நினைவு கூரும் தமது உரிமைக்காக தமிழர்கள் தொடர்ந்தும் போராடுவது தவிர்க்க முடியாததாகிவிடும். இது இன ரீதியான வெறுப்புணர்வுகளுக்கும், பிரிவினைகளுக்குமே வித்திடும்.

இறந்த தமது உறவுகளின் கல்லறையில் கண்ணீர் விட்டு அழக்கூட சுதந்திரம் இல்லாத ஒரு நாடு தன்னைத் தொடர்ந்து ஜனநாயக நாடெனக் கூறிக்கொண்டிருக்கவும் முடியாது.

# பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற வழி என்ன?



இலங்கையில் இடம் பெற்ற உள்நாட்டு போர் காரணமாக அதிக பாதிப்புகளையும் பொருளாதார நெருக்கிதல்களையும் எதிர் கொண்ட சமூகமாக பெண்தலைமைத்துவ குடும்பங்கள் காணப்படுகின்றன. இவ்வாறான பாதிப்புகளில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் எதிர் கொள்ளும் சவால்களும் நெருக்கடிகளும் இன்று அவர்களை பெரும் பொருளாதார நெருக்களுக்குள் தள்ளியுள்ள அதே நேரம் சமூகத்தால் அவர்கள் மீது ஏற்படுத்தப்படுகின்ற உடல், உள ரீதியான நெருக்குதல்கள் தற்கொலை அபாயம் வரை நீண்டு செல்கிறது.

இவ்வாறான நெருக்குதல்களிலிருந்து இவர்களை பாதுகாப்பதற்கு பொருளாதார ரீதியில் முன்னேற்ற வேண்டிய கடப்பாடு ஒவ்வொருவருக்கும் காணப்படுகின்றது. 2018ஆம் ஆண்டில் வடக்கு மாகாணத்தில் சுமார் 63 ஆயிரத்து 345 இற்கும் மேற்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள் இருப்பதாக கடந்த வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் தகவல்கள் குறிப்பிட்டிருந்தன. கடந்த கால யுத்தத்தினால் கணவனை இழந்த அல்லது காணாமல் போன, கணவனால் கைவிடப்பட்டவர்கள் என இளம் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் அதிகளவில் காணப்படுகின்றன என பெண்கள் அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்ய சுய பொருளாதாரத்தில் அவர்கள் தாங்கி நிற்கக் கூடிய ஒரு கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும். இன்று வரைக்கும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் அல்லது வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் சிறியளவில் வழங்கப்படும்போதும் அவர்களுக்கான சரியான வழிகாட்டுதல்கள் அல்லது சந்தை வாய்ப்புகள் அல்லது சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பன இல்லாத காரணத்தால் பாரிய பின்னடைவுகளை சந்தித்து அவர்கள் மீளவும் ஒரு பொருளாதார நெருக்கடிக்குள்ளதள்ளப்படுகின்ற நிலைமை காணப்படுகின்றது.

தற்போதுஒரு இலட்சத்து 47ஆயிரத்து421 பேர் வாழ்ந்த வரும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒன்பதாயிரத்து 52 பெண்தலைமைத்து குடும்பங்கள்காணப்படுவதாக மாவட்ட செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நீண்டகால யுத்த பாதிப்புகளால் அதிகம் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றன. இதற்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. ஒரு தனியார் துறையின் கீழ் வேலை செய்தல் என்பது பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு ஒரு பாரிய பிரச்சினை அதாவது அவர்களுக்குரிய வேதனம் கிடைக்காமல் அல்லது அவர்கள் நீண்ட நேரம் வேலைக்கு அமர்த்தப்படுதல் என பல்வேறுபட்ட நெருக்குதல்கள் இவற்றுக்கும் மேலாக அவர்கள் மீது உடல் உள ரீதியான பாலியல் துன்புறுத்தல்கள் என பல்வேறுபட்ட பிரச்சினைகள் காணப்படுகின்றன.

இந்த நிலைகளில் இருந்து மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணப்பாடு ஒவ்வொருவரிடத்திலும் வளர வேண்டும். கடந்த 10 ஆண்டுகளில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் சுயமாக தங்களது சொந்தக்காலில் நிற்கக்கூடிய வகையில் அவர்களுக்கு ஒரு பொருளாதாரக் கட்டமைப்பை ஏற்படுத்துகின்ற வகையில் பல்வேறு தொழில் முயற்சிகளை எடுத்து இருக்கின்றார்கள்.

குறிப்பாக ஆடைகளை உற்பத்தி செய்தல் அல்லது ஆடைகள் தைத்தல் என உள்ளூர் தொழிற்சாலைகளை நிறுவி உள்ளூர் உற்பத்திப் பொருட்களை பயன்படுத்தி பொருட்களை உற்பத்தி செய்தல். மா வகைகள் அரிசி மற்றும் தூள் வகைகள் என்பவற்றை உற்பத்தி செய்திருந்தாலும் அவற்றை சந்தைப்படுத்துவதில் பாரிய சவால்கள் காணப்படுகின்றன.

இவ்வாறான சவால்களுக்கு முகம் கொடுத்து பல பெண்கள் சாதித்திருக்கிறார்கள். அவர்கள் இப்போது பெரும் தொழில் முயற்சியாளர்களாக தொழில் வாய்ப்பை வழங்குநர்களாக காணப்படுகின்றனர். தற்போதும் கூட கிராம மட்ட அமைப்புகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உதவிகளோடு சில சிறு தொழில் முயற்சிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதாவது காளான் வளர்ப்பு கோழி வளர்ப்பு போன்ற சில செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இவற்றிற்குரிய சந்தை வாய்ப்பு கிடைக்கின்றதா என்பது கேள்விக்குறி.

ஒரு பெண் தலைமைத்துவ குடும்பம் தோட்டச் செய்கையில் உற்பத்தியாகின்ற மரக்கறிகளை கூட சந்தைப்படுத்த கூடிய வசதி கூட அவர்களது கிராமங்களிலே இல்லை. அவர்கள் அந்த பொருட்களை சந்தைக்கு கொண்டு செல்லுகின்ற போது மிகக் குறைந்த விலையில் கொள்வனவு செய்தல் அல்லது தரமற்ற பொருட்கள் என தட்டிக் கழித்தல் காணப்படுகின்றது. இவ்வாறு அதனை தட்டிக்கழிக்கும் போது அவர்கள் மனமுடைந்து அவர்கள் கொண்டு செல்லும் பொருளை அவர்கள் கேட்கின்ற விலைக்கே விற்பனை செய்கின்ற நிலை காணப்படும். இதனால் அந்த தொழிலை செய்வதற்கு அவர்கள் முயற்சிப்பதில்லை. ஏனெனில் உரிய சந்தை வாய்ப்பு கிடைப்பது இல்லை. அப்படியானால் இவ்வாறு பொருட்களை உற்பத்தி செய்வதில் என்ன இலாபம்? என்று கூட அவற்றை கைவிடுகின்றனர்.

**பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்ய சுய பொருளாதாரத்தில் அவர்கள் தாங்கி நிற்கக் கூடிய ஒரு கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும். இன்று வரைக்கும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் அல்லது வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் சிறியளவில் வழங்கப்படும்போதும் அவர்களுக்கான சரியான வழிகாட்டுதல்கள் அல்லது சந்தை வாய்ப்புகள் அல்லது சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பன இல்லாத காரணத்தால் பாரிய பின்னடைவுகளை சந்தித்து அவர்கள் மீளவும் ஒரு பொருளாதார நெருக்கடிக்குள்ளதள்ளப்படுகின்ற நிலைமை காணப்படுகின்றது.**

சில பெண் தலைமைத்துவ குடும்பங்கள் இன்று தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பணியாளர்களாக இணைந்து நீண்ட காலமாக தொழில் செய்து அவர்கள் கிடைக்கின்றன சம்பளத்தை வைத்து ஏதோ தங்களுடைய குடும்ப பொருளாதாத்தை, குடும்ப வாழ்க்கை செலவை ஓட்டிக் கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் மாதாந்தம் எடுக்கின்ற வேதனத்தை அவர்கள் தங்களுடைய வாழ்க்கைச் செலவுக்கே பயன்படுத்துகின்றார்கள். அவர்களுடைய எதிர்காலத்துக்கு அது போதாது என்பது ஒரு காரணமாக இருக்கலாம். இன்று பொருட்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லுகின்றது. இதனால் அவர்களுடைய நாளாந்த வருமானம் அல்லது மாதாந்த வருமானம் அவற்றுக்கு செலவாகி விடுகிறது.

இது இவ்வாறு இருக்க இன்று பெண் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்தி பொருட்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்த கூடிய வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி மற்றும் ஏனைய பிரதேசங்கள் பனை ஓலை பொருட்களை உற்பத்தி செய்து விட்டு அவற்றை கொண்டு சென்று சந்தைப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு சேதனப்பசளை உற்பத்தி செய்கின்ற ஒரு செயற்பாட்டை ஊக்குவித்து தரமான சேதனப் பசளை உற்பத்தி செய்வதைக் கூட ஊக்குவிக்கலாம்.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தின் வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடு நகர் ஆகிய இடங்களில் அதிகளவான பெண் தலைமைத்துவ குடும்பங்கள் காணப்படுகின்றன. இவர்களது வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட வேண்டும்.

பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதார நடவடிக்கைகளை சரியான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு சரியான வழிகாட்டுதல்கள் இல்லை. சரியான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்காமல் அல்லது மேலும் முதலீடுகளை செய்வதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தது என பல்வேறுபட்ட பிரச்சினைகளால் பெண்கள் பின் நிலையிலேயே காணப்படுகின்றார்கள்.

சரியான சந்தை வாய்ப்பு சரியான நெறிப்படுத்தல் என்பது மிக முக்கியமானதாக அமைகின்றது. ஆகவே கிராமப்புறங்களில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு அவர்களது நலிவு தன்மைகளை விளங்கிக் கொண்டும். இவ்வாறான பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்காத நிலையில் இவ்வாறான பெண்கள் தங்களை சுரண்டுவோரிடம் சிக்கி பாதிக்கப்படும் நிலை ஏற்படும். இதனால் மேலும் அவர்கள் நலிவடைதுடன் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனை போன்ற சட்டவிரோத தொழில்களுக்குள் செல்வதற்கும் வாய்ப்பாக அமைகின்றது.

இதனால் சமூகத்துக்கும் நாட்டுக்கும் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

அத்துடன் பொருளாதாரமும் பாதிக்கப்படுகிறது. ஒரு நேர்த்தியான திட்டமிடல்கள் இல்லாது வாழ்வாதார உதவிகளை கொண்டுவருவதையோ அல்லது குறுகிய காலத்துக்கு இவ்வாறான உதவிகளை வழங்குவதோ விடுத்து இதனை முழுமையாக ஆராய்ந்து அவர்களுக்கு உதவும்வகையில் வாழ்வாதர உதவிகளை முன்னெடுக்க வேண்டும் என்பதுடன் இவ்வாறான செயற் திட்டங்களை நீண்ட காலத்திற்கு செயற்படுத்தும் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

(55)





# புகையிலை , போதைப்பொருள் தடுப்பு தொடர்பிலான பங்களிப்பு மாநாடு

மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தடுப்பு நிறுவனத்தின் ஏற்பாட்டில் மதுசாரம், புகையிலை மற்றும் ஏனைய போதைப்பொருள் தடுப்பு தொடர்பில் யாழ்.மாவட்டத்தின் பங்களிப்பு தொடர்பான மாநாடு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் நேற்று மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மதுசாரம்,புகையிலை மற்றும் ஏனைய போதைப்பொருள் பாவனை போன்ற பிரச்சினைகள், சவால்களை தீர்ப்பதற்கான ஆலோசனைகளும் இடம்பெற்றன. அத்துடன் (ADIC) நிறுவனத்தினால் புதிய கற்கை நெறிக்கான அங்குரார்ப்பண நிகழ்வும் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர், நிகழ்நிலை ஊடாக நிறைவேற்றுப் பணிப்பாளர் (ADIC) கலந்து கொண்டதோடு, மனிதவலு நிதிமுகாமைத்துவ பணிப்பாளர்(ADIC), உளநல மருத்துவ நிபுணர், வடக்கு மாகாண ஒருங்கிணைப்பாளர் (ADIC), சிரேஷ்ட நிகழ்ச்சி அலுவலர்(ADIC) மற்றும் உதவி மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (75)

## முல்லைத்தீவில் 1371 விவசாயிகளுக்கு சிறுதானிய விதைகள் வழங்கிவைப்பு



சிறுபொருளாதார பயிர்ச் செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் வழிகாட்டலில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உழுந்து,பயறு செய்கைக்கான விதை பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் துணுக்காய் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

துணுக்காய் பிரதேச செயலாளர் ஆ.லதுமீரா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சின் செயலாளர் கலாநிதி.அமல் ஹர்ச டீ சில்வா,மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன், மாவட்ட விவசாய பணிப்பாளர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது மாவட்டத்தில் 1371 பயனாளிகளுக்கு உழுந்து மற்றும் பயறு விதை பொதிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன உழுந்து 522 விவசாயிகளுக்கும் பயறு 849 விவசாயிகளுக்கும் வழங்கிவைக்கப்பட்டுள்ளன இந்த இரண்டு பயிரினங்களும் மாவட்டத்தில் 727.85 ஏக்கரில் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விதை தானிய கொள்வனவிற்காக இரண்டு கட்டங்களாக நிதி கிடைக்கப்பெற்றுள்ளது 7.5 மில்லியன் ரூபாய் நிதியில் இந்த விவசாகளுக்கான விதைகள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

உழுந்து விதைக்காக 3.5 மில்லியனும் பயறு விதை கொள்வனவிற்காக 4 மில்லியன் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்த விதை தானியங்கள் விவசாயிகள் கையில் வழங்கிவைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அராசாங்க அதிபர் க.விமலநாதன் தெரிவித்துள்ளார்.15

## பிரதேசசபையின் 22இலட்சம் ஒதுக்கீட்டில் மூன்று வீதிகள் புனரமைப்பு

சாவகச்சேரி பிரதேச சபையின் எழுதுமட்டுவாழ் வட்டார உறுப்பினர் இ.தெய்வேந்திரம் பிள்ளையின் வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் பிரதேசசபையின் விசேட நிதி மூலம் மூன்று வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

2021ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட உறுப்பினருக்கான ஒதுக்கீடான 5இலட்சத்து 25,000 ரூபாய் நிதியில் எழுதுமட்டுவாழ் தெற்கு கொவ்வைக்கட்டி மூன்றாம் குறுக்கு வீதி, சபையின் வட்டாரத்திற்கான விசேட நிதியான பத்து இலட்சம் ரூபாவில் எழுதுமட்டுவாழ் ஏ9-பனிகடி இணைப்பு வீதி மற்றும் 2022ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட உறுப்பினருக்கான ஒதுக்கீடான 7இலட்சம் ரூபாவில் எழுதுமட்டுவாழ்-காயன்கடவை நான்காம் குறுக்குத் தெரு ஆகியன புனரமைக்கப் படவிருப்பதாக சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்துள்ளார்-(13)

## ஆய்வரங்கத் தொடரின் ஆறாவது நிகழ்வு

திருமறைக் கலாமன்றத்தின் இயக்குநர் அமரர் அருட்கலாநிதி நீ.மரிய சேவியர் அடிகளாரின் பன்முகப்படுத்தப்பட்ட பணிகளை ஆவணப்படுத்தும் முகமாக கலைத்தூது நீ.மரிய சேவியர் அடிகள் ஒரு பன்முகப் பார்வை' என்னும் தலைப்பில் மெய்நிகர் வழியில் சூம் செயலிக்கூடாக ஆய்வரங்கத் தொடரின் ஆறாவது நிகழ்வு நாளை 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7மணிக்கு (இலங்கை நேரம்) இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் முதுநிலை விரிவுரையாளர் திருமதி பப்சி மரியதாசன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் மரிய சேவியர் அடிகளாரின் மறைபொருள் நாடகங்கள் என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி மேரிவினிபிரிடா சுரேந்திரராஜ் ஆய்வினை வழங்கவுள்ளார்.

ஆர்வமுள்ள அனைவரும் சூம் செயலி இலக்கம் 7893644809,கடவுச் சொல் cpa என்பதற்கூடாக இந்நிகழ்வில் இணைந்து கொள்ள முடியும்.

## முல்லைத்தீவில் 15 குளங்கள் வான்பாய்கின்றன


முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்துவரும் மழை காரணமாக பல சிறு குளங்கள் வான்பாய்து வருவதால் பல விவசாயிகளின் விவசாய செய்கை பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மாவட்டத்தில் உள்ள நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள 20 பெருங்குளங்களில் 15 குளங்களின் நீர்மட்டம் நிரம்பிய நிலையில் வான் பாயத்தொடங்கியுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட நீர்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது.

முத்தையன் கட்டு நீர்பாசன பிரிவின் கீழ் உள்ள விசுவமடுகுளம்,உடையார்கட்டு குளம்,மருதமடுகுளம், மதவாளசிங்கன் குளம், கணுக்கேணி குளம், வவுனிக்குள நீர்ப்பாசன பிரிவின் கீழ் உள்ள தென்னியன்குளம்,அம்பலப்பெருமாள் குளம்,மருதங்குளம்,பழையமுறுகண்டிகுளம்,கோட்டைகட்டிய குளம்,மல்லாவிகுளம்,தேறாங்கண்டல் குளம் ஆகியன அதன் நீர்மட்டங்கள் நிரம்பிய நிலையில் வான்பாயத்தொடங்கியுள்ளன.

இதேவேளை தண்ணிமுறிப்பு குளத்தின் நீர்வரத்து அதிகமாக காணப்படுவதால் அதன் மூன்று வான்கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளது மூன்று கதவுகளும் இரண்டடி அளவு திறந்துவிடப்பட்டுள்ளது. வவுனியா வடக்கில் பெய்துவரும் அதிகளவான மழையினால் தண்ணிமுறிப்பு குளத்திற்கான நீர் வரத்து அதிகமாகிக்கொண்டிருப்பதாகவும் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (15)

# அம்பலப்பெருமாள்குளம் வான் பாய்கின்றது



முல்லைத்தீவு -அம்பலப்பெருமாள்குளம் வான் பாயத் தொடங்கி உள்ளது.

வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவில் முக்கிய குளமாக இக்குளம் காணப்படுகின்றது. பழையமுறிகண்டி குளத்தின் வான் வெள்ளம் இக்குளத்தினை நிரப்பி வான் பாயத் தொடங்கியவுடன் அம்பலப்பெருமாள் குளத்தின் வான் வெள்ளம் வன்னேரிக்குளத்தினை நிரப்பும்.

ஏற்கனவே கோட்டைக்கட்டியகுளத்தின் வான் வெள்ளம் வன்னேரிக்குளத்தினை நிரப்பி வன்னேரிக்குளம் வான் பாய்ந்த வண்ணம் உள்ளது. தற்போது அம்பலப்பெருமாள்குளம், கோட்டைக்கட்டியகுளத்தின் வான் வெள்ளம் வன்னேரிக்குளத்தினை நிரப்பி வன்னேரிக்குளத்தின் வான் வெள்ளம் மண்டைக்கல்லாறு வழியாக பூநகரி கடலினைச் சென்றடைந்து கொண்டிருக்கின்றது. குளங்கள் வான் பாய்வதனால் போக்குவரத்துகள் அம்பலப்பெருமாள் குளத்திலும் வன்னேரிக்குளத்திலும் பாதிக்கப்பட்டுள்ளன.( 27)

## மானிப்பாய் பிரதேச சபையில் இரு கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றம்

மானிப்பாய் பிரதேச சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தொடரின் போது இரு கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் இடம்பெற்று வரும் வரவு-செலவு திட்ட கூட்டத்தொடரில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தீலிபன் ஆகியோரால் ஆற்றப்பட்ட சர்ச்சைக்குரிய பாராளுமன்ற உரைகள் தொடர்பாகவும், ஒரே நாடு ஒரே சட்டம் தொடர்பான ஆணைக்குழுவின் தலைவராக கடும்போக்கு பௌத்த பிக்கு கலகொட அத்தே ஞானசார தேரர் நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்துமே மேற்படி இரு கண்டனத்தீர்மானங்களும் மானிப்பாய் பிரதேசசபையில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இக் கண்டனத் தீர்மானம் மீதான விவாதத்தின் போது ஈ.பி.டி.பி.யினர் சபை நாகரீகத்திற்கு முரணான வார்த்தைகளை பிரயோகித்து தமது எதிர்ப்பை தெரிவித்தனர். இதனால் தவிசாளர் அவர்களை எச்சரிக்கவே அவர்கள் சபையை விட்டு வெளியேறிய நிலையில் சபையில் பிரசன்னமாகி இருந்த ஏனைய கட்சிகளை சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர்களினால் இக்கண்டன தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (36)

## ஆறுமுகநாவலர் பெருமானின் குருபூஜை நிகழ்வு

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், நல்லூர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் இன்று காலை 8 மணிக்கு, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் குருபூசை நிகழ்வு இடம்பெறவுள்ளது. மங்கல விளக்கேற்றல், விடைக்கொடியேற்றல் நிகழ்வுகளோடு ஆரம்பமாகவுள்ள இந்நிகழ்வில், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள நாவலர் மணிமண்டப உத்தியோகத்தர்க.நிஜலிங்கம் அவர்களின் ஒழுங்கமைப்பில் குருபூசை வழிபாடும் திருமுறை ஓதலும் இடம் பெறவுள்ளது.

## விபத்தில் உயிரிழந்த சிறுமியின் தந்தைக்கு துவிச்சக்கரவண்டி



அண்மையில் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாக இடம்பெற்ற வீதி விபத்தில் சிக்கி உயிரிழந்த மாணவியின் தந்தைக்கு துவிச்சக்கரவண்டி அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

துவிச்சக்கரவண்டியை சாவகச்சேரி லவ்லி கிறீம் கவுஸ் உரிமையாளர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி வழங்கி வைத்திருந்தார். (13)

## இணையவழி அரங்க கதையாடல்

புத்தாக்க அரங்க இயக்கம் வாராந்தம் நடத்தும் மெய்நிகர் இணையவழி அரங்க கதையாடல் 52 ஆவது நிகழ்வு நாளை இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் நாடகத்துறை ஆசிரியர் யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் ,க.கஜேந்திரன் ஈழத்து இசை நாடக ஆளுமைகளில் சரவணமுத்து பற்றிய நோக்கு என்னும் விடயத்தில் கதையாடவுள்ளார் .

நிறைவுரையினை புத்தாக்க அரங்கஇயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் வழங்கவுள்ளார்.

இவ் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 6473348261

கடவுச் சொல் ATM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

## அதிபர்களை நியமிக்கக் கோரிக்கை

முல்லைத்தீவு -துணுக்காய் கல்வி வலயத்தில் முக்கிய நான்கு பாடசாலைகளில் அதிபர்கள் பணியில் இல்லாமல் இயங்குகின்றன.

மாங்குளம் மகா வித்தியாலயம், யோகபுரம் மகா வித்தியாலயம், பாலிநகர் மகா வித்தியாலயம், ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் நீண்ட காலமாக அதிபர்கள் இல்லாமலே இயங்குகின்றன.

இப்பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமியுங்கள் என பெற்றோர்களினால் துணுக்காய் கல்வி வலயம், வடமாகாண கல்வித் திணைக்களம் என்பனவற்றிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். ஆனால் அதிபர்கள் நியமிக்கப்படவில்லை. இதன் காரணமாக பாடசாலைகளின் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாகவும் பெற்றோர்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

துணுக்காய் கல்வி வலயத்தில் முக்கிய பாடசாலைகளாக இப்பாடசாலைகள் காணப்படுகின்றன. நீண்ட காலமாக பதில் அதிபர்களின் கீழ் இப்பாடசாலைகள் இயங்குகின்றன. இப்பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமியுங்கள் என துணுக்காய் கல்வி வலயத்தினால் வடமாகாண கல்வித் திணைக்களத்திற்கு விபரங்கள் அனுப்பப்பட்ட போதிலும் அதிபர்கள் நியமிக்கப்படவில்லை. அதிபர்கள் பாடசாலைகளில் இல்லாததன் காரணமாக மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதுடன் பாடசாலையின் முன்னேற்றமும் தடைப்பட்டுள்ளதாக பெற்றோர்களினால் தெரிவிக்கப்படுகின்றது .27

## குண்டு மீட்பு

வல்வெட்டித்துறை பகுதியில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது வீடு கட்டுவதற்காக அத்திவார கிடங்கை வெட்ட முற்பட்டபோதே குறித்த குண்டு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

உடனடியாக வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து பொலிஸ் விசேட அதிரடிப் படை உதவியுடன் குறித்த குண்டை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறியக் கிடைத்தது. (75)


## கேள்விஅறிவித்தல் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

கீழ்க்காணும் உணவகங்களை நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் பணிமனையில் 15.12.2021 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| உணவகத்தின் பெயர் | அமைவிடம் |
|---|---|
| பிரதானஉணவகம் - I | திருநெல்வேலி |
| பிரதானஉணவகம் - II | திருநெல்வேலி |
| முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீட உணவகம் | கலாசாலைவீதி, திருநெல்வேலி. |
| மருத்துவபீட உணவகம் | திருநெல்வேலி |
| மருத்துவமாணவர் விடுதி உணவகம் | யாழ்ப்பாணம் |
| இராமநாதன் உணவகம் | மருதனார்மடம் |
| ஆனந்தகுமாரசுவாமி மாணவர் விடுதி உணவகம் | திருநெல்வேலி |
| சித்தமருத்துவஅலகு உணவகம் | கைதடி |

மீளளிக்கப்படும் கேள்விவைப்பு பணமாகரூபா 2000/= இனை மக்கள்வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 97000060000268 இற்கும்,மீளளிக்கப்படாத கட்டணமாகரூபா 500/= இனை மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம்97000060000276 இற்கும் தனித்தனியாக செலுத்தி பெற்றுக் கொண்டபற்றுச்சீட்டுகளினை சமர்ப்பித்து கேள்விப்படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்துபெற்றுக்கொள்ளலாம்.மேற்குறிப்பிட்ட கேள்விப்படிவங்களில் அனுப்பப்படாதவிண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடிதஉறையின் இடதுபக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக மேற்காட்டப்பட்டபடி குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலகநேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகநலச்சேவைகள் கிளையில் நேரடியாகவோ,அல்லதுதொலைபேசிஊடாகவோ (தொலைபேசி இல 0212226716) பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

26.11.2021

# எழுதுமட்டுவாழ் வடக்கு மருதங்குளம் வீதியை புனரமைத்துத் தருமாறு ஆளுநரிடம் கோரிக்கை

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் வடக்கு ஜே/334 கிராம அலுவலர் பிரிவிலுள்ள மருதங்குளம் வீதியை புனரமைப்புச் செய்து தருமாறு கிராம மக்கள் சார்பாக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை வடக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

அவர் தனது கோரிக்கை கடிதத்தில், மிருசுவில் வடக்கு மன்னங்குறிச்சி வீதியில் ஆரம்பமாகி எழுதுமட்டுவாழ் வடக்கு வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்குரிய வீதியில் குறித்த மருதங்குளம் வீதி முடிகிறது.

சாவகச்சேரி பிரதேசசபையில் இவ்வாண்டு பல வீதிகள் தங்களுக்கு சமர்ப்பிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன.அதில் 1.20கிலோமீற்றர் நீளமுடைய குறித்த வீதியும் உள்ளடங்குகிறது.

தினமும் ஏராளமானோர் பயன்படுத்தும் இவ் வீதியை புனரமைக்க 10.8 மில்லியன் ரூபாய் தேவைப்படும் என உத்தேச மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு மக்கள் கொடிகாமம் செல்லாது எழுதுமட்டுவாழை வந்தடைய இவ் வீதியைப் பயன்படுத்துகின்றனர்.இவ் வீதியில் பிரசித்தி பெற்ற மன்னங்குறிச்சி கந்தசாமி ஆலயம் காணப்படுகிறது.

அதேவேளையில் வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் ஆலயம் செல்லும் பக்தர்கள்,நாகர்கோவில் பிரதேச மீனவர்கள் இவ்வீதியை அதிகம் பயன்படுத்துகின்றனர்.எனவே அதிக தேவைப்பாடுடைய இவ் வீதியை புனரமைப்புச் செய்து தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். என மேலும் அவர் குறிப்பிட்டிருந்தார். (13)

# தமிழ்ச்சங்கம் நடத்தும் நாவலர் நினைவரங்கம்

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுக்கும் நாவலர் நினைவரங்கம் நாளை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நிகழ்விற்கு அனுசரணை வழங்கும் கரிகணன் நிறுவனப் பணிப்பாளர் சிவ.ராஜ்குமார் தம்பதியர் மங்கல விளக்கேற்றுவர்.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தொடக்கவுரையையும் யாழ். மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன் வாழ்த்துரையையும் வழங்குவர். தெல்லிப்பழை யூனியன் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் ச.அமலஅசாம் நடையில் நின்றுயர் நாயகன் நாவலர் என்ற பொருளிலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் ஜெ.தவேதன் எழுந்த கொழுங்கனல் என்ற பொருளிலும் உரையாற்றுவர். சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரித் தமிழாசிரியரும் இந்து ஆன்மீகப் பிரசாரகருமாகிய க.கனகதுர்க்கா நாவலர் வழி என்ற பொருளில் நினைவுப் பேருரையாற்றுவார். தமிழ்ச்சங்கச் செயலாளர் இ.சர்வேஸ்வரா நிறைவுரையையும் நன்றியுரையையும் வழங்குவார். சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நிகழ்வில் பங்கேற்குமாறு தமிழ்ச்சங்கத்தினர் வேண்டியுள்ளனர்.

# உடையார்கட்டுக்குளம் வான் பாய்கின்றது

முல்லைத்தீவு மாவட்டத்தின் முக்கிய குளங்களில் ஒன்றான உடையார்கட்டுக் குளம் நேற்று முன்தினம் முதல் வான் பாயத் தொடங்கி உள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முத்தையன்கட்டுக்குளம், வவுனிக்குளம், உடையார்கட்டுக் குளம் என்பன பெரிய குளங்களாகக் காணப்படுகின்றன. இந்நிலையில் பெய்து வரும் மழை காரணமாக உடையார் கட்டுக்குளம் நிரம்பி வான் பாயத் தொடங்கி உள்ளது. அதிகரித்த மழை வீழ்ச்சி இடம்பெறுமானால் ஏ-35 பரந்தன் முல்லைத்தீவு வீதியில் மூங்கிலாறுப் பகுதியில் வீதியினை மூடி குளத்தின் வான் வெள்ளம் பாயும் என இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (27)


## சீரான வடிகாலமின்மையால் வெள்ளத்திற்குள் தர்மபுரம் சந்தை

கிளிநொச்சி- கரைச்சி பிரதேச சபையின் தர்மபுரம் பொதுச் சந்தை சீரான வடிகாலின்மையால் வெள்ளத்திற்குள் சூழ்ந்துள்ளதாக வியாபாரிகளும், பொது மக்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொரு தடவையும் மழை பெய்யும்போது சந்தை வெள்ளத்தினால் சூழப்பட்டிருப்பதனால் பொது மக்களுக்கும் வியாபாரிகளுக்கும் பெரும் நெருக்கடி ஏற்படுகின்றது எனத் தெரிவித்துள்ள அவர்கள் இதனால் தங்களது வியாபார நடவடிக்கையும் பாதிப்படைந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

பல தடவைகள் கரைச்சி பிரதேச சபையின் கவனத்திற்கு கொண்டு சென்ற போதும் அவர்கள் இதுவரை வெள்ளம் வடிந்தோடும் வகையில் சீரான வடிகாலமைப்பினை ஏற்படுத்தி தரவில்லை எனவும் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (52)

# கடலில் மிதந்துவந்த 28 கிலோ மஞ்சள் மூடை



அனலைதீவுக் கடலில் மிதந்து வந்த 28 கிலோ எடையுடைய மஞ்சள் மூடை ஒன்று இன்று கடற்படையினரால் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, குறித்த கடல் பகுதியில் சந்தேகத்திற்கிடமான பொதி ஒன்று மிதந்து வருவதை கடற்படையினர் அவதானித்தனர்.

அதனை பிரித்து சோதனையிட்ட போது மஞ்சள் இருப்பது கண்டறியப்பட்டது.

குறித்த மஞ்சள் மூடை எவ்வாறு வந்தது என்பது தொடர்பான மேலதிக விசாரணைகளை கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர். (75)

# வீதி வேலைகள் ஆரம்பம்

முல்லைத்தீவு -மாந்தை கிழக்கில் முக்கிய வீதி வேலைகள் இடம் பெற உள்ளன.

மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் எம்.தயானந்தன் மேற்கொண்ட முயற்சி காரணமாக மாந்தை கிழக்கின் பாண்டியன்குளம் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து சிவபுரம் வரையான 3.6 கிலோமீற்றர் வரையான வீதி வேலைகள் தொடங்க உள்ளன.

இதற்கான வீதி வேலைக்கான கேள்வி மனுக் கோரல்கள் இடம் பெற்று வேலைகள் சில நாட்களில் தொடங்க உள்ளன. ஆசிய அபிவிருத்தி வங்கியின் 106 மில்லியனில் இவ்வேலைகள் இடம் பெற உள்ளன. வேலைகள் இடம் பெற உள்ள வீதியினை மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் பொறியியலாளர்கள் நேற்று முன்தினம் பார்வையிட்டனர். . (27)

# ஆறு துப்புரவு செய்யப்படுகின்றது



கிளிநொச்சி-அக்கராயன் ஆறு தற்போது துப்புரவு செய்யப்படுகின்றது. கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவினால் இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் 103 ஆறுகளை பாதுகாக்கும் கருத்திட்டத்தின் கீழ் சுற்றாடல் அமைச்சினால் ஒதுக்கப்பட்ட ரூபா.4 மில்லியனில் இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. பயிர்ச் செய்கைக் கூட்டங்களில் அக்கராயன் விவசாயிகள் அக்கராயன் ஆற்றினைத் துப்புரவு செய்யுங்கள் என கடந்த பத்தாண்டுகளாக கோரிக்கை விடுத்து வந்த நிலையில் அதற்கான பயன் கிடைத்துள்ளது.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அக்கராயன் ஆறு துப்புரவு செய்யப்படாததன் காரணமாக ஆற்றின் வெள்ளம் வயல் நிலங்களுக்குள் பரவி பயிர் அழிவுகளை ஆண்டு தோறும் ஏற்படுத்தி வரும் நிலையில் தற்போது ஆறு துப்புரவு செய்யப்படுகின்றது.

அக்கராயன் குளத்தில் இருந்து மரப் பாலம் வரையான சுமார் 03 கிலோமீற்றர் வரையான ஆறு தற்போது முதற்கட்டமாக துப்புரவு செய்யப்படுகின்றது.

இதன் மூலம் அக்கராயன் விவசாயிகள் தமது வயல் நிலங்களுக்குள் வெள்ளம் பரவாமல் பாதுகாப்பான சூழல் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (27)

# வல்வெட்டித்துறையில் குண்டு கண்டுபிடிப்பு

வல்வெட்டித்துறை பகுதியில் நேற்று குண்டு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, வீடு கட்டுவதற்காக அத்திவார கிடங்கை வெட்ட முற்பட்டபோதே குறித்த குண்டு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

உடனடியாக வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து பொலிஸ் விசேட அதிரடிப் படை உதவியுடன் குறித்த குண்டை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறியக் கிடைத்தது. (75)

# மதியாமடு பாடசாலைக்கு நிதி உதவி வழங்கிவைப்பு

நிக்சன் அறக்கட்டளையின் ஊடாக மதியாமடு பாடசாலை மாணவர்களுக்கு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அவர்களின் கற்றல் செயற்பாட்டினை ஊக்கிவிக்கும் நோக்கில் முதற்கட்டமாக ஒரு தொகை நிதி வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

பாடசாலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கான வினாத்தாள்களை சிறந்த முறையில் பெற்றுக் கொள்வதற்காகவும் புலம்பெயர் தமிழர்களின் நிதிப்பங்களிப்பில் நிக்சன் அறக்கட்டளை ஊடாக ஒரு தொகை நிதி வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

நிக்சன் அறக்கட்டளையின் இணைப்பாளர் யூட்சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாண முன்னாள் விவசாய அமைச்சர் க.சிவனேசன் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் க.தவராசா ,சமூக சேவையாளர் தவராசா உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு நிதியினை வழங்கிவைத்துள்ளார்கள். (15)


## வடமாகாண மரநடுகை மாதம்

கார்த்திகை 01-30, 2021

"புல்லின் இதழை மாந்தன் உருவாக்கும் வரை இயற்கை அவனது அறிவியல் அறிவைக் கண்டு சிரிக்கவே செய்யும்."



தோமஸ்அல்வா எடிசன் (அமெரிக்க அறிவியலாளர்)

## பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2021

(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"வறுமையும், வன்முறையும் பெரிதும் தாக்குவது பெண்களையே. வறுமை ஒழிப்போம்! வன்முறை தடுப்போம்! சமத்துவமான சமுதாயத்திற்காக ஒன்றுபட்டு உழைப்போம்.!"

யாழ் சமூக செயற்பாட்டு மையம்


# ஆசிரியர்களை நியமித்தல் நிகழ்வு



வவுனியா -நெடுங்கேணி ,மதியாமடு பாடசாலையில் ஆசிரியர்களை பணியில் அமர்த்தல், வளங்களை பெற்றுக் கொடுக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

நிக்சன் அறக்கட்டளை அமைப்பினால் நெடுங்கேணி மதியாமடு பாடசாலையில் தரம் 05 புலமைப்பரிசில் வகுப்புக்கு விசேஷ ஆசிரியர்களை பணிக்கு நியமித்தல், விசேஷ வகுப்புக்களை நடத்துவதற்கான வளவாளர்களை நியமித்து அவர்களுக்கான நிதியை வழங்குதல், கற்றல் உபகரணங்களை பெற்றுக்கொடுத்தல் சம்பந்தமான ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

இதில் வடமாகாணசபை முன்னாள் விவசாய அமைச்சர் கந்தையா சிவனேசன், கரைதுறைபற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கனக தவராசா, நிக்சன் அறக்கட்டளை இலங்கை இணைப்பாளர் யூட்சன், கலைஞர் தவராசா, சேவைத்தொடர்பாளர் செல்விவேணி, பாடசாலை சமூகம், பெற்றோர்கள், மாணவர்கள் என்போர் கலந்து சிறப்பித்தனர். (27)

# ரயர் கொழுத்திய குற்றச்சாட்டில் இருவர் கைது



தமிழீழ விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் மற்றும் மாவீரர் வாரம் என கண்காணிப்புகள், கெடுபிடிகள் உள்ள நிலையில் யாழ்.குருநகரில் வீதியில் ரயர் கொழுத்திய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுக் காலை குருநகரில் வீதியில் ரயர் கொழுத்தப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து அப்பகுதியில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டிருந்த நிலையில் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். (40)

# யாழில் இராஜாங்க அமைச்சரால் விதை பொதிகள் வழங்கி வைப்பு



வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச் செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் வழிகாட்டலில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உழுந்து மற்றும் பயறு பயிர்ச்செய்கை திட்டத்தின் கீழ் விதை பொதிகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசனின் தலைமையில் நேற்று முன்தினம் காலை மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

# ஆசிரியர், அதிபர் சம்பள முரண்பாட்டை தீர்க்க மேலதிகமாக 31 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

## -கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன-



பா. கிருபாகரன் - ந.ஜெயகாந்தன்

ஆசிரியர், அதிபர் சம்பள முரண்பாட்டை தீர்ப்பதற்கான அமைச்சரவை உப குழுவின் அறிக்கைக்கு அமைய, பிரதமர், நிதி அமைச்சர் மற்றும் ஆசிரிய தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடி தீர்வை வழங்குவதற்கு இம்முறை வரவு-செலவுத்திட்டத்தில் மேலதிகமாக 31 மில்லியன் ரூபா உள்ளடக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கூட்டத்திலேயே அமைச்சர் இதனைத்தெரிவித்தார்.

அதேபோன்று, உயர்தர பெறுபேறுகளுடன் தொடர்புடைய Z Score தற்பொழுது வெளியிடப்பட்டுள்ளதாக அறிவித்த அமைச்சர், ஆசிரியர், அதிபர் சம்பள முரண்பாடு காணப்படும் நிலையில் க.பொ.த. (சாதாரண தர) பெறுபேறுகளை வெளியிடுவதில் இருந்த தடைகளை நீங்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும், கொவிட் 19 தொற்று நோய் காரணமாக பிற்போடப்பட்ட க.பொ.த. (உயர் தர) பரீட்சை, தரம்5 புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சைகளுக்கான தினங்கள் தற்பொழுது தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். அதற்கமைய, 2022 ஜனவரி மாதத்தில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையையும், பெப்ரவரி முதலாம் வாரத்தில் க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையையும், மே மாதம் 23 ஆம் திகதி க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையையும் நடத்துவதற்கு தற்பொழுது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சட்டத்தை பாடசாலை பாடத்திட்டத்தில் ஒரு பாடமாக உள்ளடக்குவது தொடர்பான பாராளுமன்ற உபகுழுவினால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழுவின் அறிக்கை இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்தவினால் ஆலோசனைக் குழுவின் அனுமதிக்க சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், பாடசாலை பாடத்திட்டத்தில் தற்போது 6ஆம் தரம் முதல் 9ஆம் தரம் வரை கட்டாயப் பாடமாக உள்ள குடியுரிமைக் கல்வி பாடத்தை இந்த சீர்திருத்தங்களுக்குப் பிறகு சட்டம் மற்றும் குடியுரிமைக் கல்வியாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல, தேசிய பல்கலைக்கழகம் இல்லாத ஒவ்வொரு மாவட்டத்திலும் நகர பல்கலைக்கழகம் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில், குழுவின் தலைவர் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன, அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர்களான கலாநிதி சுசில் பிரேமஜயந்த, சீதா அரம்பெபோல, பியல்நிஷாந்த, விஜித பேருகொட, பாராளுமன்ற உறுப்பினர்களான ரவுப் ஹக்கீம், கலையரசன், சுதத் மஞ்சுள, சாந்த பண்டார, எரான் விக்ரமரத்ன, பிரேம்நாத் சி.தொலவத்த, காதர் மஸ்தான், வைத்திய கலாநிதி உபுல் கலப்பத்தி, யதாமினி குணவர்தன, அனுபபஸ்குவல், சார்ள்ஸ் நிர்மலநாதன், நிமல் பியதிஸ்ஸ, சாமர சம்பத் தசநாயக்க, வீ. இராதாகிருஷ்ணன், உதயகாந்த குணதிலக, பேராசிரியர் சரித ஹேரத், மதுர விதானகே, மஞ்சுளா திசநாயக்க, ரோஹன திசநாயக்க, கோகிலா குணவர்தன ஆகியோரும் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா உள்ளிட்ட உரிய நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தி அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# இரசாயன உரத் தடையை அரசு நீக்கியும் உரத்தை இறக்குமதி செய்ய முடியாத நிலை

## -நிறுவனங்களுக்கு 2,400 கோடி ரூபா செலுத்த வேண்டும்-

க.பிரசன்னா

இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ள போதும் உர நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையினை அரசாங்கம் செலுத்தாமையினால் உர இறக்குமதி குறித்து தீர்மானங்களை மேற்கொள்ள முடியாதென இரசாயன உர இறக்குமதி நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

கடந்த பருவத்தில் மானிய உரத்திற்காக உர நிறுவனங்களுக்கு 24 பில்லியன் ரூபாவினை அரசாங்கம் செலுத்த வேண்டியுள்ளது. இதேவேளை உலக சந்தையில் இரசாயன உரங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

இதற்கு முன்னர் இலங்கைக்கு அதிகளவான இரசாயன உரங்கள் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இருப்பினும், இரசாயன உரங்களுக்கான உலகளாவிய தேவை காரணமாக, உரங்களின் ஏற்றுமதியை சீனா கட்டுப்படுத்தியுள்ளது. சீனாவில் தற்போது தனது சொந்த நாட்டின் தேவைக்கேற்ப போதுமான உரங்கள் இருப்பதாலும், ஏற்றுமதி செய்ய போதுமான உரங்கள் கையிருப்பில் இல்லாததே இதற்குக் காரணமாகும்.

எனவே இலங்கை தற்போது ரஸ்யாவிடமிருந்து உரத்தை இறக்குமதி செய்ய வேண்டும். சீனாவில் இருந்து உரம் இறக்குமதி செய்யப்பட்டிருந்தால், கொள்கலன்களில் தேவையான அளவு மட்டுமே இறக்குமதி செய்ய முடியும். ஆனால் ரஸ்யாவில் இருந்து இறக்குமதி செய்தால் அவ்வாறு செய்ய முடியாது. ரஸ்யாவின் உர ஏற்றுமதி கொள்கையின் கீழ் இலங்கை உரத்தினை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை காணப்படுகின்றது.

ரஷ்யாவிலிருந்து உரங்களை இறக்குமதி செய்வதாயின் ஒரே நேரத்தில் 35,000 முதல் 40,000 மெட்ரிக் தொன் வரை பெற வேண்டும். ஆனால், உர இறக்குமதி நிறுவனங்களுக்கு எவ்வித சலுகைகளையும் அரசாங்கம் வழங்காமையினால் ஒரே நேரத்தில் பாரிய தொகையினை இறக்குமதி செய்வது கடினமென இலங்கை உர இறக்குமதி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

# யாழ். தீவகத்தின் குடிநீர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## -அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவிப்பு-

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

'யாழ்ப்பணத்திற்கு கங்கை' வேலைத் திட்டத்தின் கீழ் யாழ். தீவகத்தின் குடிநீர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று நீர்ப்பாசனத்துறை அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் கமத்தொழில் அமைச்சு, நீர்ப்பாசன அமைச்சு உள்ளிட்ட நான்கு அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய உணவு உற்பத்தியை இரண்டு மடங்கு அதிகரிப்பதும், அதன் மூலமாக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதும், நுகர்வோருக்கு குறைந்த விலையில் விளைச்சல் பொருட்களை இலகுவாக பெற்றுக்கொடுக்கவும், விவசாய ஏற்றுமதியை அதிகரிக்கவும் அதன் மூலமாக சர்வதேச வருவாயை கூட்டவும் நடவடிக்கை எடுக்க வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான பல பிரச்சினைகளுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் தீர்வுகளை வழங்க அதற்கான வேலைத்திட்டமொன்றை உருவாக்க பாரிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் மோசமான கால நிலை காரணமாக பாதிக்கப்பட்டு வருகின்ற மன்னார் மாவட்டத்தில் இரண்டு போகங்களிலும் விவசாயம் செய்யவும், குடிநீருக்கான நீர் வழங்கலின் கீழ் மல்வத்து ஓயா நீர் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம். வெகு விரைவில் இதனை நிறைவுக்கு கொண்டுவருவோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்ல்ஸ் எம்.பி இது குறித்து தொடர்ச்சியாக எம்மிடம் கேள்வி எழுப்பிக்கொண்டுள்ளார். ஆகவே விரைவில் நீர்த்திட்டம் முழுமைப்படுத்துவோம்.

அதேபோல் கிழக்கு மாதுறு ஓயா அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் புதிதாக ஆறாயிரம் விவசாய குடும்பங்களுக்கு 17 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் சேதன விவசாய ஏற்றுமதி வலயத்தை உருவாக்கவும் அதில் தமிழ், சிங்கள, முஸ்லிம் என சகல இன இளைஞர்களையும் இணைத்துக் கொள்ள தீர்மானித்துள்ளோம். இதுவும் இன நல்லிணக்க வேலைத்திட்டமாகும். இஸ்ரேல் போன்ற நாடுகளின் ஆலோசனைகளை பெற்றே இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

'யாழ்ப்பணத்திற்கு கங்கை' வேலைத் திட்டத்தின் கீழ் யாழ்.தீவகத்தின் குடிநீர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும். தேர்தலுக்கு முன்னரே வடமாராச்சி பகுதியில் இதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுக்க முயற்சிகளை எடுத்தோம். அதனை விரைவில் நிறைவு செய்வோம். கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் வேலைத்திட்டங்களை நிறுத்தியதை போன்று நாம் நிறுத்த மாட்டோம் என்றார்.

# மட்டு-கொழும்பு இரவு கடுகதி பொலநறுவையிலிருந்து

மட்டு-கொழும்பு இரவு கடுகதி புகையிரத சேவை திருத்தப்பணி காரணமாக பொலநறுவையிலிருந்து இடம்பெறும்.

தினமும் இரவு 8.15 மணிக்கு மட்டக்களப்பு புகையிரத நிலைய நிலையத்திலிருந்து கொழும்புக்குப் புறப்படும் இரவு கடுகதி பாடுமீன் புகையிரத சேவை சனிக்கிழமை 27ஆம் திகதி இரவு பொலநறுவையிலிருந்து இரவு 10.20மணிக்கு புறப்படுமென மட்டக்களப்பு புகையிரத நிலைய அதிபர் ஏ.பேரின்பராசா தெரிவித்தார்.

புணாணைக்கும் வெலிகந்தைக்குமிடையிலான பிரதேசத்தில் பாலம் திருத்தப்பணிகள் காரணமாகவே இப் புகையிரத சேவை பொலநறுவையிலிருந்து இடம் பெறுமெனவும் அவர் தெரிவித்தார்.

# குளக்கரையில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

வவுனியா-இராசேந்திரகுளம் குளப் பகுதியில் மீன்பிடிக்க சென்றவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

குறித்த நபர் இராசேந்திரகுளத்தில் மீன்பிடிப்பதற்காக வெள்ளிக்கிழமை காலை தனது வீட்டில் இருந்து சென்றுள்ளார். நீண்ட நேரமாகியும் வீடு திரும்பாத நிலையில் அவரது மனைவி குளப் பகுதிக்கு சென்று தேடியுள்ளார்.

இதன்போது குளப்பகுதியில் காணப்பட்ட பிட்டியில் சடலமாக கிடந்தமை கண்டறியப்பட்டது. மின்னல் தாக்கத்தின் காரணமாக இறந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் சிவலிங்கம் தினேஷ்குமார் (வயது-28) என்ற இளம் குடும்பஸ்தரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவ இடத்திற்கு சென்ற கிராம சேவையாளர் பிரதீப் மற்றும் நெளுக்குளம் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# புதிய வகை கொரோனா குறித்து நிபுணர்கள் கூறுவது என்ன?

தென்னாபிரிக்கா மற்றும் போட்ஸ்வானா நாடுகளில் கண்டறியப்பட்டுள்ள புதிய வகை கொ ரோனாவைரஸ் உலக நாடுகள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. கொ ரோனா எப்படி செயல்படுகிறது என்பதிலேயே புதிய வகை கொ ரோனா தாக்கத்தை ஏற்படுத்தலாம் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இணைய வழியாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதுகுறித்து விவரித்துள்ள உலக சுகாதார அமைப்பின் தொழில்நுட்ப குழு தலைவர் மரியா வான் கெர்கோவ், 'கவலை என்னவென்றால், பல மாறுதல்கள் தென்படும்போது, அது வைரஸ் எவ்வாறு செயல்படுகிறது என்பதில் தாக்கத்தை ஏற்படுத்தும். திறமைமிக்க தடுப்பூசிகளில் இந்த மாறுபாடு என்ன தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதைப் புரிந்து கொள்ள சில வாரங்கள் ஆகும்' என்றார்.

முன்பிருந்த வகைகளை காட்டிலும் இந்த உருமாறியகொ ரோனா வித்தியாசமாக இருப்பது தெளிவாக தெரிகிறது என இரண்டு தென்னாப்பிரிக்க பல்கலைக்கழகங்களில் உயிர் தகவலியல் பேராசிரியராக பணிபுரிந்துவரும் துலியோ டி ஒலிவேரா வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது தெரிவித்தார்.

புதிய வகை கொ ரோனா குறித்து லண்டனை மையமாக கொண்டு இயங்கும் யுசிஎல் மரபியல் நிறுவனத்தின் பணிப்பாளர் ஃபிராங்கோயிஸ் பலூக்ஸ் இதுகுறித்து கூறுகையில், 'இது ஒரு நோயெதிர்ப்பு குறைபாடுள்ள நபரின் நாள்பட்ட நோய்த்தொற்றிலிருந்து இந்த வைரஸ் பரவியிருக்கலாம், அவர் சிகிச்சை அளிக்கப்படாத எய்ட்ஸ் நோயாளியாக இருக்கலாம்' என்றார்.

இதன் தீவிர தன்மை குறித்து விவரித்துள்ள தொற்றுநோயியல் நிபுணர் எரிக் ஃபீகல்-டிங், 'தென்னாபிரிக்காவில் பரவல் விகிதம் 1 சதவீதத்தில் இருந்து 30 சதவீதமாக உயர்ந்துள்ளது. தென்னாபிரிக்கா முழுவதும் திடீரென பரவ தொடங்கிய இது பரவலாக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும் ஒரு வாரத்தில் 1வீத நேர்மறையிலிருந்து திடீரென்று 30வீதமாக ஆக மாறுகிறது.

புதிய வகை கொ ரோனா முன்னேப் போதும் இல்லாத அளவுக்கு, வைரஸின் புரத கூர்முனைகளில் மாறுதல்களை கொண்டுள்ளது. இதன் காரணமாகவே, தென்னாப்பிரிக்காவில் அது வேகமாக பரவிவருவதாக இம்பீரியல் கல்லூரி லண்டனில் தொற்றுநோய் நிபுணராக உள்ள நீல் பெர்குசன் தெரிவித்துள்ளார்.

# இன்றைய நாள் மகிழ்ச்சியான நாள் புலிகளின் தலைவரின் பிறந்த நாளன்று

## -கேக் கொடுத்து கொண்டாடிய சிவாஜி-



இன்றைய நாள் (நேற்று) மகிழ்ச்சியான நாள் என கேக் கொடுத்து கொண்டாட்டத்தில் எம். கே. சிவாஜிலிங்கம் ஈடுப்ட்டார். கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் இடம் பெற்ற வழக்கின் நிறைவின் பின்னர் அங்கு நின்றவர்களிற்கு கேக் கொடுத்த மகிழ்ந்தார்.

இன்றைய நாள் (நேற்று) சிறப்பான நாள் எனவும், அதனை சந்தோசமாக கொண்டாடுமாறும் அவர் தெரிவித்து இவ்வாறு கேக்கினை அங்கு தரித்திருந்தவர்களிற்கு பகிர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# டிங்கர் லசந்த பொலிஸாரின் துப்பாக்கி சூட்டில் உயிரிழப்பு

சன்ஷைன் சுத்தாவின் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரான டிங்கர் லசந்த என அழைக்கப்படும் லுணுவிலகே லசந்த நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை பொலிஸாரின் துப்பாக்கி பிரயோகத்தில் உயிரிழந்துள்ளார்.

களுத்துறையிலுள்ள வீடொன்றில் மறைந்திருந்த சந்தர்ப்பத்தில் களுத்துறை குற்றத்தடுப்பு பிரிவினரால் சந்தேகநபரான இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு துப்பாக்கிகள் மற்றும் கைக்குண்டொன்றை தேடுவதற்காக குறித்த சந்தேகநபரை அழைத்து சென்ற சந்தர்ப்பத்தில், பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது சந்தேகநபர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

இதையடுத்து பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட தற்பாதுகாப்பு தாக்குதலின் போதே, இவர் உயிரிழந்துள்ளார். இந்த சம்பவத்தில்; இரு பொலிஸார் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# தினக்குரல் ஊழியரின் தந்தை காலமானார்

தினக்குரல் பத்திரிகையின் கணினிப்பிரிவு ஊழியர் பாமதி சேந்தனின் தந்தை நாகமுத்து வேணுகோபால் (வயது -87) வெள்ளிக்கிமை கொழும்பில் காலமானார்.

யாழ்ப்பாணம்,பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் கொழும்பு-15, மட்டக்குளியில் 65/215 காக்கைதீவை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னாருக்கு நான்கு பெண் பிள்ளைகள் உள்ளனர். இறுதிக் கிரிகைகள் தொடர்பான தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

# கண்ணீர் அஞ்சலி

இவ்வுலகு
1933 ✿ 11 ✿ 16



இறைபதம்
2021 ✿ 11 ✿ 23

## திருமதி சுப்பிரமணியம் இராசம்மா

திண்ணிய நெஞ்சராகித் தெளிவுறு
தன்மையராகித் தவம்செபம் தினமும்
பண்ணியே! பண்புடன் வாழ்இராசம்மா
பாரோர்க்கு வழிகாட்டியாய் என்றுமே!
மண்ணினில் கண்ணியமாய் மாண்புறு
பெண்மணியாய் அண்ணளார் அடிகள்தன்னில்
விண்ணுலகம் எய்தாரன்றோ! வியப்புறு
இயற்கை நீதிதன்னைக் காண்போம்நாம்.

வலிகாமம் கல்வி வலயத்தில் அலுவலகப் பணியாளராகக் கடமையாற்றும் திரு.சு.கிருபாகரன் அவர்களின் பாசம் மிகு தாயார் திருமதி சுப்பிரமணியம் இராசம்மா அவர்கள் கடந்த 23.11.2021 இல் இறையடி சேர்ந்துள்ளார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.12, திருமால் வீதி, திருகோணமலை எனும் முகவரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் கடந்த 24.11.20201 இல் இடம்பெற்றிருந்தன.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவர்தம் குடும்பங்களுக்கு நலன்புரிக் கழகத்தின் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

நலன்புரிக் கழகம்
வலிகாமம் கல்வி வலயம்,
மருதனார்மடம்.

# அவுஸ்திரேலியாவின் புதிய டெஸ்ட் தலைவராக பேட் கம்மின்ஸ் நியமனம்



ஆஷஸ் தொடருக்கு முன்னதாக அவுஸ்திரேலிய அணி டெஸ்ட் கிரிக்கெட் தலைவராக வேகப்பந்து வீச்சாளர் பேட் கம்மின்ஸையும், உப தலைவராக ஸ்டீவ் ஸ்மித்தையும் நேற்று வெள்ளிக்கிழமை நியமித்துள்ளது. கடந்த வாரம் அவுஸ்திரேலிய அணியின் டெஸ்ட் தலைவர் பதவிலியிலிருந்து டிம் பெய்ன் இராஜினாமா செய்ததை அடுத்து இந்த நியமனம் வந்துள்ளது.

இதன் மூலம் 28 வயதான பேட் கம்மின்ஸ் அவுஸ்திரேலிய ஆண்கள் டெஸ்ட் கிரிக்கெட் அணியின் 47 ஆவது தலைவராகிறார்.2017 ஆம் ஆண்டில் ஒரு பெண் சக ஊழியருடன் பாலியல் ரீதியான குறுஞ்செய்திகள் பகிர்வு தொடர்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்காக டாஸ்மேனிய விக்கெட் காப்பாளரும் டெஸ்ட் தலைவருமான டிம் பெய்ன் ஒரு வாரத்திற்கு முன்பு பதவி விலகியமையும் குறிப்பிடத்தக்கது.

# கோலூன்றிப் பாய்தலில் தேசிய சாதனை படைத்தார் சச்சினி



இலங்கையின் கோலூன்றிப் பாய்தல் வீராங்கனையான சச்சினி பெரேரா 3.60 மீற்றர் உயரம் பாய்ந்து பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் தேசிய சாதனையைப் படைத்தார்.

57 ஆவது இராணுவ மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டி கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்று வருகிறது. இதில் ஒரு தேசிய சாதனையும், 3 இலங்கை இராணுவ மெய்வல்லுநர் போட்டிச் சாதனையும் நிகழ்த்தப்பட்டுள்ளன.

இதில் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் பங்கேற்ற இலங்கை இராணுவத்தின் சமிக்ஞை படையணியைச் சேர்ந்த சச்சினி பெரேரா 3.60 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்துடன், தேசிய சாதனையையும் படைத்தார்.

இது இலங்கை இராணுவ மெய்வல்லுநர் போட்டி சாதனையாகவும் பதிவாகியிருந்தது.

இதேவேளை, இலங்கை இராணுவத்தின் இலத்திரனியல் படையணியில் கடமையாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஏ. புவிதரன் மற்றும் இலங்கை இராணுவத்தின் சேவைப் படையணியின் எச்.எஸ்.ஈ.ஜனித் இருவரும் ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் 5 மீற்றர் உயரம் பாய்ந்து இலங்கை இராணுவ மெய்வல்லுநர் சாதனையை பகிர்ந்துக்கொண்டனர். ஆண்களுக்கான 4 தர 200 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியை 1 நிமிடம் 23:74 செக்கன்களில் நிறைவுசெய்த இலங்கை இராணுவத்தின் பீரங்கிப் படையணியினர் இலங்கை இராணுவ மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் சாதனையை படைத்திருந்தனர்.

# அறிமுக போட்டியில் சதம் இந்திய வீரர் ஸ்ரேயாஸ் அய்யர் அசத்தல்



நியூசிலாந்து அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் அறிமுகமான இந்திய வீரர் ஸ்ரேயாஸ் அய்யர் சதம் அடித்து அசத்தியுள்ளார்.


இந்திய-நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் தொடங்கியது. கான்பூரில் நடைபெறும் இந்த போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்து ஆடுகிறது.

2 ஆம் நாள் ஆட்டம் நேற்று தொடங்கியது. ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில் ஜடேஜா சவுத்தி பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஸ்ரேயாஸ் அய்யர் தனது முதல் போட்டியிலேயே சதம் அடித்து சாதனை படைத்தார். அறிமுக டெஸ்டில் சதம் அடித்த 16 ஆவது இந்திய வீரர் என்ற பெருமையை அவர் படைத்துள்ளார்.

அறிமுகப் போட்டியில் சதம் அடித்த முதல் இந்தியர் லாலா அமர்நாத் (1933) ஆவார். இந்தியாவுக்காக அறிமுக டெஸ்டில் சதம் அடித்தவர்கள் பட்டியலில் ஆர்.எச்.ஷோதன், கிருபால் சிங், அப்பாஸ் அலி பெய்க், ஹனுமந்த் சிங், குண்டப்பா விஸ்வநாத், சுரீந்தர் அமர்நாத், முகமது அசாருதீன், பிரவின் ஆம்ரே, சவுரவ் கங்குலி, வீரேந்தர் சேவாக், சுரேஷ் ரெய்னா, ஷிகர் தவான், ரோஹித் சர்மா. பிரித்வி ஷா, ஆகியோர் அடங்குவர்.

ஸ்ரேயாஸ் ஐயருக்கு முன், 2018 ஆம் ஆண்டில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக பிரித்வி ஷா சதம் அடித்தார். அவர் அறிமுக போட்டியிலேயே 134 ரன்கள் அடித்து அசத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## டெஸ்ட் போட்டியிலிருந்து மொஹமதுல்லஹ் ஓய்வு




டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக பங்களாதேஷ் அணியின் சகலதுறை வீரர் மொஹமதுல்லஹ் அறிவித்துள்ளார்.

35 வயதான மொஹமதுல்லஹ் 2009 ஆம் ஆண்டில் தனது டெஸ்ட் பயணத்தை ஆரம்பித்தார்.

அவர் 50 போட்டிகளில் விளையாடி, 33.49 சராசரியில் 2,914 ஓட்டங்களை எடுத்தார், இதில் 5 சதங்கள் மற்றும் 16 அரை சதங்கள் என்பன அடங்கும்.

அதேநேரம் அவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் 43 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார். ஆறு டெஸ்ட் போட்டிகளுக்கு பங்களாதேஷின் தலைவராகவும் இருந்துள்ளார்.

இது தொடர்பில் ஒரு அறிக்கையில் கூறியுள்ள மொஹமதுல்லஹ்,நான் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றாலும், ஒருநாள் மற்றும் ரி-20 சர்வதேச போட்டிகளில் தொடர்ந்தும் விளையாடுவேன். வெள்ளை பந்து கிரிக்கெட்டில் எனது நாட்டிற்காக எனது சிறந்த திறனை வழங்க ஆவலுடன் காத்திருக்கிறேன் என்றார்.

# ஜூனியர் உலக கோப்பை கொக்கி கனடாவை பந்தாடியது இந்திய அணி



ஜூனியர் உலக கோப்பை ஆக்கி போட்டியில் இந்திய அணி தனது தொடக்க லீக் ஆட்டத்தில் பிரான்சிடம் தோல்வி அடைந்தது.

12 ஆவது ஜூனியர் (21 வயதுக்கு உட்பட்டோர்) உலக கோப்பை கொக்கி போட்டி ஒடிசா தலைநகர் புவனேஸ்வரில் உள்ள கலிங்கா ஸ்டேடியத்தில் நடைபெற்று வருகிறது.

வருகிற 5 ஆம் திகதி வரை நடைபெறும் இந்த போட்டியில் நடப்பு சம்பியன் இந்தியா, ஜெர்மனி, பெல்ஜியம், பாகிஸ்தான் உள்பட 16 அணிகள் பங்கேற்றுள்ளன. அவை 4 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு அணியும், தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோதும். லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் ரொப்-2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் கால் இறுதிக்கு தகுதி பெறும். முதல் நாளில் பி பிரிவில் நடந்த லீக் ஆட்டம் ஒன்றில் நடப்பு சாம்பியன் இந்திய அணி, பிரான்சை எதிர்கொண்டது. இதில் இந்திய அணி 4-5 என்ற கணக்கில் பிரான்சிடம் அதிர்ச்சி தோல்வி கண்டது.இந்நிலையில், நேற்று நடைபெற்ற பி பிரிவு லீக் ஆட்டத்தில் இந்தியா, கனடா அணிகள் மோதின. முதல் போட்டியில் அதிர்ச்சி தோல்வி அடைந்த இந்திய அணி இந்தப் போட்டியில் ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடியது. இதனால் முதல் பாதியில் இந்தியா 4-1 என முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியிலும் இந்தியாவின் ஆக்ரோஷம் தொடர்ந்தது. இந்திய வீரர்கள் சஞ்சய், அராய்ஜித் சிங் ஹட்ரிக் கோல் அடித்தனர்.

இறுதியில், இந்தியா 13-1 என்ற கோல் கணக்கில் கனடாவை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது.

# இலங்கைக்கு தங்கப் பதக்கங்களை வென்று கொடுப்பதே இலக்கு

## -தினேஷ் பிரியன்த்த ஹேரத்-



ஆசிய பரா போட்டி மற்றும் உலக பரா சம்பியன்ஷிப் ஆகிய போட்டிகளில் இலங்கைக்கு தங்கப் பதக்கங்களை வென்று கொடுப்பதற்கு தாம் உள்ளிட்ட பரா குழுவினர் எதிர்பார்த்துள்ளதாக டோக்கியோ பரா ஒலிம்பிக்கில் உலக சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்ற தினேஷ் பிரியன்த்த ஹேரத் தெரிவித்தார்.

4 ஆவது ஆசிய பரா போட்டி சீனாவின் ஹாங்ஸூ நகரில் அடுத்தாண்டு ஒக்ரோபர் மாதத்தில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிக்கான பயிற்சிகளை தற்போதிருந்தே இலங்கை பரா மெய்வல்லுநர் வீர, வீராங்கனைகள் ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில், பரா வீர, வீராங்கனைகளுக்கான அனுசரணையை வழங்குவதற்கு மாஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனம் முன்வந்துள்ளது.

இதனை முன்னிட்டு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த செவ்வாய்க்கிழமை கைச்சாத்திடப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,இந்த போட்டிகளுக்கான இலங்கை மெய்வல்லுநர் குழாத்தில் இடம்பெற்றுள்ள சகலரும் பலதரப்பட்ட தியாகங்களைச் செய்தும் விடா முயற்சியுடன் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதற்கான முடிவுகளை நீங்கள் எமது போட்டிகளின்போது கண்டுணர்வீர்கள். இதற்காக இலங்கை பரா குழுவில் திறமைமிக்க பல வீர, வீராங்கனைகள் காணப்படுவதாகவும், இந்த போட்டித் தொடர்களின்போது இலங்கை நாமத்தை உலகத் தரத்தில் கொண்டு செல்வதற்கு எமது வீர்களுக்கு முடியும் என்றார்.

# நேற்றிரவு என்னால் தூங்கவே முடியவில்லை;ஷ்ரேயஸ் ஐயர்



இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்து 3 ரி20, 2 டெஸ்டுகளில் விளையாடுகிறது நியூசிலாந்து அணி. 3 ஆட்டங்கள் கொண்ட ரி20 தொடரை 3-0 என முழுமையாக வென்றது. இந்திய அணி. டெஸ்ட் தொடரில் முதல் டெஸ்ட் கான்பூரில் நடைபெற்று வருகிறது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி கப்டன் ரஹானே, பேட்டிங்கைத் தேர்வு செய்தார். இந்திய அணியில் மூன்று சுழற்பந்து வீச்சாளர்கள், 2 வேகப்பந்து வீச்சாளர்கள் இடம்பெற்றுள்ளார்கள்.

இந்திய அணியில் ஸ்ரேயஸ் ஐயரும் நியூசி. அணியில் ரவீந்திராவும் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு அறிமுகம் ஆகியுள்ளார்கள். இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 111.1 ஓவர்களில் 345 ஓட்டங்கள் எடுத்தது. அறிமுக டெஸ்டில் சிறப்பாக விளையாடிய ஷ்ரேயஸ் ஐயர், 157 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 12 பவுண்டரிகளுடன் சதமடித்தார். அதன்பிறகு 105 ஓட்டங்களில் சௌதி பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். முதல் நாள் முடிவில் ஷ்ரேயஸ் ஐயர் ஆட்டமிழக்காமல் 75 ஓட்டங்கள் எடுத்திருந்தார். 2 ஆம் நாள் முடிவில் நியூசிலாந்து அணி 57 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 129 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

சதமடித்தது பற்றி ஷ்ரேயஸ் ஐயர் கூறியதாவது:

முதல் நாளில் இருந்து நடந்த அனைத்திற்கும் மகிழ்ச்சியாக உள்ளேன். நேற்றிரவு நன்கு தூங்குவேன் என எதிர்பார்த்தேன். ஆனால் என்னால் தூங்கவே முடியவில்லை. கவாஸ்கர், அறிமுக டெஸ்டுக்கான தொப்பியை எனக்கு வழங்கினார். அவர் மிகவும் ஊக்கம் அளித்தார். சதமடித்தது நிறைவைத் தந்தது என்றார்.

## -இந்தோனேஷிய ஓபன் பட்மிண்டன்-

# இந்திய வீராங்கனை பி.வி.சிந்து கால்இறுதிக்கு முன்னேற்றம்



ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 2 ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னாள் சாம்பியனான இந்திய வீரர் ஸ்ரீகாந்த் 14-21, 18-21 என்ற நேர்செட்டில் டோக்கியோ ஒலிம்பிக் சாம்பியனான விக்டர் ஆக்சல்செனிடம் தோல்வி அடைந்து வெளியேறினார்.

இந்தோனேஷிய ஓபன் பேட்மிண்டன் போட்டி பாலி நகரில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடந்த பெண்கள் ஒற்றையர் 2 ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் உலக சம்பியனான இந்திய வீராங்கனை பி.வி.சிந்து, தரவரிசையில் 26 ஆவது இடத்தில் உள்ள யோனி லியை (ஜெர்மனி) சந்தித்தார். 37 நிமிடம் நடந்த இந்த ஆட்டத்தில் சிந்து 21-12, 21-18 என்ற நேர் செட்டில் யோனி லியை விரட்டியடித்து கால்இறுதிக்கு முன்னேறினார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 2 ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னாள் சம்பியனான இந்திய வீரர் ஸ்ரீகாந்த் 14-21, 18-21 என்ற நேர்செட்டில் டோக்கியோ ஒலிம்பிக் சாம்பியனான விக்டர் ஆக்சல்செனிடம் (டென்மார்க்) தோல்வி அடைந்து வெளியேறினார். மற்றொரு ஆட்டத்தில் இந்திய வீரர் சாய் பிரனீத் 21-17, 14-21, 21-19 என்ற செட் கணக்கில் கிறிஸ்டோ போபோவை (பிரான்ஸ்) வீழ்த்தி கால்இறுதிக்குள் நுழைந்தார்.

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஊடகவியலாளர்களின் உரிமைகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்த அரசு முன்வர வேண்டும்

## -என்கிறார் செல்வம் எம்.பி-

பா. கிருபாகரன் - ந. ஜெயகாந்தன்

உயிரைப் பணயம் வைத்து சில சமயங்களில் பணியாற்றும் ஊடகவியலாளர்கள் தொடர்பிலும் அவர்களது உரிமைகள் தொடர்பிலும் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். ஊடகவியலாளர்கள் விசாரணைக்கு அழைக்கப்படும் நிலை மாற்றம் பெற வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.யான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற வெளிநாட்டு அமைச்சு,பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு,வெகுசன ஊடக அமைச்சு ஆகியவற்றின் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,



நாட்டினதும் மக்களினதும் பிரச்சினைகளை நேர்மையுடனும் உண்மையுடனும் வெளிக்கொண்டுவரும் ஊடகவியலாளர்கள் விசாரணைக்கு அழைக்கப்படும் நிலை மாற்றம் பெற வேண்டும். அது விடயத்தில் ஊடகத்துறை அமைச்சர் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

கடந்த கொரோனா வைரஸ் சூழ்நிலையிலும் ஊடகவியலாளர்கள் பொருளாதார ரீதியில் பெரும் பாதிப்புக்கு உள்ளானார்கள். சாதரணமாக மக்களுக்கு வழங்கப்பட்ட 5000 ரூபா கொடுப்பனவு கூட அவர்களுக்கு வழங்கப்பட வில்லை.

அதேவேளை அவர்களுக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அவர்களுக்கு மோட்டார் சைக்கிள்களை பெற்றுக் கொடுப்பது, அவர்களுக்கான வீட்டுத் திட்டம் அல்லது வீட்டுக் கடன்களை பெறக்கூடிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் ஊடகத்துறை அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும்.

உயிரைப் பணயம் வைத்து சில சமயங்களில் பணியாற்றும் ஊடகவியலாளர்கள் தொடர்பிலும் அவர்களது உரிமைகள் தொடர்பிலும் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

அதேபோன்று சிரேஷ்ட ஊடகவியலாளரான தன பாலசிங்கம் மற்றும் வவுனியா ஊடகவியலாளரான மாணிக்கவாசகம் போன்றவர்கள் மிகவும் சுகவீனமான நிலையில் உள்ளனர். அவர்களது குடும்பங்களும் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளன. அவர்களுக்கு உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதில் அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும்.

கடந்த காலங் களில் நாட்டின் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வந்த பல ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டும் காணாமல் போயுமுள்ள நிலையில் அவர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை. படுகொலை செய்யப்பட்டுள்ள ஊடகவியலாளர்களின் குடும்பங்களின் நிலை மிக மோசமாக உள்ளன அது தொடர்பில் ஊடகத்துறை அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

# யுத்தத்தில் மரணித்தவர்களை நினைவுகூருவதில் தவறும் கிடையாது

பா. கிருபாகரன் - ந. ஜெயகாந்தன்



யுத்தத்தில் மரணித்தவர்களை நினைவுகூருவதில் எந்த வித தவறும் கிடையாது என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற வெளிநாட்டு அமைச்சு,பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு,வெகுசன ஊடக அமைச்சு ஆகியவற்றின் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அக்கட்சியின் எம்.பி.யும் எதிர்க்கட்சிகளின் கொறடாவுமான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. மேலும் கூறுகையில்,

யுத்தத்தில் மரணித்தவர்களை நினைவுகூருவது நாகரிகமடைந்த நாடுகளில் உள்ள நடைமுறை .அதனால் தான் சர்வதேச நாடுகளில் யுத்தத்தில் மரணித்தவர்கள் நினைவு கூரப்படுகின்றனர். எமது நாட்டில் ஜே.வி.பி கலவரத்தில் மரணித்தவர்கள் இன்றும் நினைவுகூரப்படுகின்றனர்.

இந்நிலையில் யுத்தத்தில் மரணித்தவர்களை தமிழ் மக்கள் நினைவுகூருவதனை,அவர்களுக்கு நினைவு தூபி அமைப்பதை தடை செய்வது, அவர்களை அச்சுறுத்துவது தவறு. ஐக்கிய நாடுகள் சபையும் இவ்வாறான நடவடிக்கைகளை கண்டித்துள்ளது என்றார்.

# கிழக்கு மாகாணத்தின் அனைத்து பாலங்களின் தரம் குறித்து ஆராய விசேட குழு அனுப்பப்படும்

## -ஆளுநர் அனுராதா தெரிவிப்பு-

கிழக்கு மாகாணத்தில் தற்போது செயற்படும் அனைத்து பாலங்களின் தரம் குறித்து ஆராய விசேட குழுவொன்று அனுப்பி வைக்கப்படும் என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்துள்ளார்.

பொலிஸ், மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியல் பிரிவு மற்றும் கடற்படையினரால் இந்தக் குழுவிற்குத் தலைமை தாங்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு விபத்தின் போது காயமடைந்து சிகிச்சை பெற்று வருவோரை பார்ப்பதற்காகக் கிண்ணியா தளவைத்திய சாலைக்கு சென்ற போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.ஆளுநர் மேலும் கூறுகையில்,

'இனி இது போன்ற சம்பவங்கள் நடக்காமல் இருக்க நாம் அனைவரும் உறுதி எடுக்க வேண்டும். ஒருவரையொருவர் நோக்கி விரல் நீட்டும் நேரம் இதுவல்ல. போருக்குப் பின்னர் இலங்கையில் அதிக எண்ணிக்கையிலான பாலங்கள் கிழக்கு மாகாணத்தில் கட்டப்பட்டன.அது மகிந்த ராஜபக்ச அரசாங்கத்திலிருந்தே ஆரம்பமானது. இலங்கையின் மிக நீளமான பாலம் கிழக்கு மாகாணத்தில் உள்ளது. இந்த இடத்தில் பாலம் கட்டும் பணி கோவிட் தொற்றால் பாதித்ததால் தாமதமானது. மாற்று வழி இருந்தபோதிலும் மக்கள் அதை பயன்படுத்த விரும்பவில்லை.

இந்த சம்பவத்தை நாங்கள் இப்போது விசாரித்து வருகிறோம். இது தொடர்பில் அறிக்கை பெறப்படும். அந்த அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் மீது அடுத்தகட்ட நடவடிக்கை எடுப்போம். குற்றவாளிகள் இருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட்டோம். பொறுப்பிலிருந்து யாரும் தப்ப முடியாது.

எனினும் தற்போது இவர்களுக்குத் தேவையான போக்குவரத்து வசதிகள் கடற்படையினரால் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் இந்த பாலத்தின் பணிகளை விரைவில் முடிக்க அரசு கவனம் செலுத்தி வருகிறது என்றார்.

# 5 நீர்த்தேக்கங்களின் 30 வான்கதவுகள் திறப்பு

ஐந்து நீர்த்தேக்கங்களின் 30 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இதன்படி, தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தின் எட்டு வான் கதவுகள் ஐந்து அடி வரையும், ராஜாங்கன நீர்த்தேக்கத்தின் நான்கு வான் கதவுகள் எட்டு அடி வரையும், இரண்டு வான் கதவுகள் ஆறு அடி வரையும், இரண்டு வான் கதவுகள் நான்கு அடு வரையும், நான்கு வான் கதவுகள் இரண்டு அடிவரையும் தப்போவ நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் ஒரு அடி வரையும் , இரண்டு வான் கதவுகள் 6 அங்குலம் வரையும் திறக்கப்பட்டுள்ளன.

அத்துடன், இங்கினிமிட்டிய நீர்த்தேக்கத்தின் நான்கு வான் கதவுகள் ஒரு அடி வரையும் அங்கமுவ நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் நான்கு அடி வரையும் திறக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய கடமை நேர அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# கட்டுமானங்கள் தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்களில் ஒரே வடிவ அனுமதிப் பத்திரத்தை அறிமுகப்படுத்த ஆராய்வு

கட்டுமானப் பணிகளுக்கு வெவ்வேறு உள்ளூராட்சி மன்றங்களில் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளும்போது அவை வெவ்வேறு வடிவங்களில் காணப்படுவதால் ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்க நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் ஒரே வடிவத்தில் அனுமதிப்பத்திரத்தை உருவாக்குவது தொடர்பில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் உள்ள இந்த அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் கூட்டம் இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தலைமையில் நடைபெற்றது. இதிலேயே மேற்கண்ட விடயம் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

பல்வேறு உள்ளூராட்சி மன்றங்களுக்குச் செல்லும் போது ஒவ்வொரு மன்றத்திலும் கட்டுமானங்கள் தொடர்பில் வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு விதமாகக்

காணப்படுகின்றன. இதன் காரணமாக சேவையைப் பெற்றுக்கொள்ளச் செல்லும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் என இக்கூட்டத்தில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே தெரிவித்தார்.

எனவே, நாடு முழுவதிலும் உள்ள உள்ளூராட்சிமன்றங்களிலும் ஒரே மாதிரியான அனுமதிப் பத்திரத்தை வழங்குவது அவசியம் என்றும் அவர்சுட்டிக்காட்டினார்.

இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தி உரிய வழிமுறையொன்றை விரைவில் வகுக்குமாறு

இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த, அமைச்சின் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

அத்துடன், திட்டங்களை அனுமதிக்கும்போது அதிகாரிகளினால் இடம்பெறும் முறைகேடுகள் மற்றும் நிதி மோசடிகள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், இது தொடர்பில் முறையான

பொறிமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது.

விசேடமாக இவ்விடயம் தொடர்பில் முறைப்பாடுகளைக் கையளிப்பதற்கு தனியான இடமொன்றை

அடையாளம் காண்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

ஒரு கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு பல நிறுவனங்களிடம் அனுமதி பெறுவதில் மக்கள் எதிர்நோக்கும்சிரமங்கள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து அதற்கானதிட்டத்தை விரைவில் தயாரிக்குமாறு இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். பல பகுதிகளில் ஏற்கனவே உள்ள கட்டுமானங்கள் மற்றும் புதிய கட்டுமானத் தேவைகள் தொடர்பான பிரச்சினைகளும் இந்த அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் ஆராயப்பட்டது.

# பாராளுமன்ற வளாகத்தின் வான் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் உபகரண தொகுதி கையளிப்பு



பாராளுமன்ற வளாகத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதிப்படுத்தும் நோக்கில் பாதுகாப்பு அமைச்சின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் ஊடாக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பாதுகாப்பு உபகரணத் தொகுதிகள் கையளிக்கும் நிகழ்வு பாராளுமன்றத்தில் இடம்பெற்றது.

இந்த உபகரணத் தொகுதிகள் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்தவால் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளிக்கப்பட்டன.

வான் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் ட்ரோன் எதிர்ப்புக் கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பாடல் சாதனங்கள் போன்றவை

இத்தொகுதியில் அடங்குகின்றன.

பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயாக, படைக்கல சேவிதர் நரேந்திரபெர்னாந்து, விமானப் படையின் பணியாட்தொகுதியின் பிரதானி எயார் வைஸ் மார்ஷல்

எம்.டி.ஈ.பி.பாயோ, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ரேனுக ரொவல், பிரதிப் பணிப்பாளர் நாயகம் கப்டன்

ரி.டி.எஸ்.டி.சில்வா மற்றும் பாராளுமன்ற பொலிஸ் பிரிவின் பணிப்பாளர் மஞ்சுள செனரத் ஆகியோர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த உபகரணத் தொகுதியை இறக்குமதி செய்வதாகவிருந்தால் 19 மில்லியன்ரூபாவை அண்மித்த நிதியைச் செலவுசெய்ய வேண்டியிருக்கும். எனினும் பாதுகாப்பு அமைச்சின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் மூலம் உள்நாட்டில் இவற்றை உற்பத்தி செய்ததன் ஊடாக 7மில்லியன் ரூபாவுக்கு அண்மித்த தொகையே

செலவுசெய்யப்பட்டுள்ளது என்றும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

# பட்டய ஊடக கற்கை நிறுவனத்தை உருவாக்க அமைச்சரவை அனுமதி

பா. கிருபாகரன் - ந. ஜெயகாந்தன்

அனைத்து ஊடகங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஊடகவியலாளர்களின் செயற்பாட்டினால் ஏற்படும் நன்மைகளை விட தீமைகளே அதிகமாக காணப்படுகின்றன.

அவற்றை கருத்தில் கொண்டு பல்கலைக் கழகங்கள், பாடசாலைகள் ஊடாக சிறந்த ஊடகவியலாளர்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற வெளிநாட்டு அமைச்சு,பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு,வெகுசன ஊடக அமைச்சு ஆகியவற்றின் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

ஊடகவியலாளர்கள் பல்வேறு குறைபாடுகள் மற்றும் சவால்களை எதிர்நோக்கும் நிலையில் அவர்களுக்கான முறையான பயிற்சிகள் இல்லாமை பெரும் குறைபாடாக உள்ளது. அதற்கிணங்க அனைத்து ஊடகங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது ஊடகவியலாளர்களின் செயற்பாட்டினால் ஏற்படும் நன்மைகளை விட தீமைகளே அதிகமாக காணப்படுகின்றன.

அவற்றை கருத்தில் கொண்டு பல்கலைக் கழகங்கள் பாடசாலைகள் ஊடாக சிறந்த ஊடகவியலாளர்களை உருவாக்குவதே எமது நோக்கம். எமது பாட விதானங்களில் ஊடகம் தொடர்பில் விடயங்கள் இருந்தாலும் அது தொழில் ரீதியான ஊடகவியலாளர்களை உருவாக்குவதாகவே அமைந்துள்ளது.

நான் ஊடகத்துறை அமைச்சு பொறுப்பேற்று 98 நாட்கள் நிறைவடைந்துள்ளன. இராஜாங்க அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளருடன் இணைந்து நாம் இந்த குறுகிய காலத்தில் பல திட்டங்களை முன் வைத்துள்ளோம்.

ஜனாதிபதி விருது விழாவை நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். அத்துடன் ஊடகவியலாளர்களின் தொழில் கௌரவத்தை பாதுகாக்கும் வகையில் அசிதசி காப்புறுதி திட்டம் ஒன்றையும் அறிமுகப்படுத்தியுள்ளோம். எதிர்வரும் டிசம்பர் 2ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபஷ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் இடம்பெறும் விசேட நிகழ்வில் அந்த திட்டம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

அத்துடன் சிறந்த ஊடகவியலாளர்களை உருவாக்கும் வகையில் அவர்களுக்கு சிறந்த பயிற்சிகளை பெற்றுக் கொடுப்பதற்காக பட்டய ஊடக கற்கை நிறுவனம் ஒன்றை உருவாக்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அதன் முதற் கட்ட நடவடிக்கைகள் அடுத்த மாதம் ஆரம்பமாகும் என்றார்.

# ஆளுந்தரப்பு குப்பைகளை அவர்களே கிளறுகின்றனர்

## -அனுரகுமார திசாநாயக்க தெரிவிப்பு-

ஆளுங்கட்சியின் குப்பையை அவர்களே கிளரும் நிலையில் இந்த நாட்டிற்கு ஏற்பட்டுள்ள சாபக்கேடு என்ன என்பதை அறிந்துகொள்ள முடியும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று கமத்தொழில் அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

விவசாயத்துறை அமைச்சர் நேற்று (நேற்று முன்தினம்) சபையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன குறித்து சபையில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். அவர் பாவித்த வாகனங்கள், அவரது வீட்டின் நீளமும் அகலமும் குறித்தெல்லாம் பேசினார்.



அதேபோல் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அவருக்கு முன்னர் ஆட்சிசெய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தவறான செயற்பாடுகள் குறித்து குற்றம் சுமத்தினார். அவர் விமானங்களை பாவித்த முறைமை, ஹெலிகொப்டர்களை பாவித்த விதம் குறித்தெல்லாம் பேசியுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தற்போதைய ஜனாதிபதி எவ்வாறு மக்கள் பணத்தை எவ்வாறு துஸ்பிரயோகம் செய்கின்றார் என்ற காரணிகளை கூறுகின்றார்.

ஆகவே, இந்த சபையில் இருந்து நடப்பவற்றை பார்த்துக்கொண்டிருந்தால் இந்த நாட்டிற்கு என்ன சாபக்கேடு ஏற்பட்டுள்ளது என்பதை அறிந்துகொள்ள முடியும் என்றார்.

# 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான மூன்றாவது தடவை தடுப்பூசி வழங்கல்



கோவிட்-19 தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் கீழ் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு மேலதிகமாக மூன்றாவது தடவையாக கோவிட்-19 தடுப்பூசியானது நாளை மறுதினம் 29 ஆம் திகதியிலிருந்து வழங்கப்பட உள்ளது.

60 வயதிற்கு மேற்பட்டவர்களில் ஏற்கனவே சினோபாம் கொவிட்-19 தடுப்பூசியை இரண்டு தடவைகள் பெற்றுக்கொண்டவர்கள் மட்டுமே இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து ஆகக்குறைந்து மூன்று மாத இடைவெளியின் பின் ,த் தடுப்பூசியினை பெற்றுக் கொள்ளலாம்.

60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நிலையங்கள், திகதிகள் பற்றிய விபரங்கள் அந்தந்த பிரதேசங்களிற்குரிய சுகாதார வைத்திய அதிகாரிகளினால் அறியத்தரப்படும். கோவிட் -19 இற்காக இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்ட 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் தமது தடுப்பூசி அட்டையினை சமர்ப்பித்து தமக்குரிய மூன்றாவது தடுப்பூசியினை பெற்றுக் கொள்ள முடியும்.

தடுப்பூசி அல்லது வேறு மருந்துகளிற்கு ஒவ்வாமை உடையவர்களுக்கு எதிர்வரும் மார்கழி மாதம் 04, 11 ஆம் திகதி சனிக்கிழமைகளில் தடுப்பூசி வழங்குவதற்கு யாழ்.மாவட்டத்தில் யாழ் போதனா வைத்தியசாலை மற்றும் பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, தெல்லிப்பளை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைகளிலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட பொது வைத்தியசாலைகளிலும் தடுப்பூசிகள் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவ்வாறான நிலைமைகள் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டு தடுப்பூசி வழங்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டவர்கள் தடுப்பூசி வழங்கும் நிலையத்தில் உள்ள வைத்திய அதிகாரியின் பரிந்துரைக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைகள் ஏதாவது ஒன்றில் தமக்குரிய தடுப்பூசியினை பாதுகாப்பாக பெற்றுக்கொள்ள முடியும் எனவும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் 113 மாணவர்கள் கொரோனா தொற்றால் பாதிப்பு

## -மருத்துவர் நிமால் அருமைநாதன்-



கிளிநொச்சியில் கடந்த 57 நாட்களில் 113 பாடசாலை மாணவர்கள் அடங்கலாக 1452 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது என மாவட்ட தொற்று நோயியலாளர் மருத்துவர் நிமால் அருமைநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது

தடுப்பூசியாக பைசர் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இன்று இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசியாக பைசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது

இதன் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி மற்றும் பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் மற்றும் கிளிநொச்சி பொது வைத்தியசாலை ஆகிய இடங்களில் இத் தடுப்பூசி ஏற்றும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (52)

# மாணவச் செல்வங்களை தீர்மானிக்கும் சக்தியாக உருவாக்க வேண்டும்

## -பிரதேச சபை உறுப்பினர் இராமநாதன்-

மாணவச் செல்வங்களை தீர்மானிக்கும் சக்தியாக உருவாக்க வேண்டும் என கரவெட்டிப் பிரதேசசபை உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜனின் பிரத்தியேக செயலாளருமாகிய ச.இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ் மாவட்ட பாடசாலைகளில் இடம்பெற்ற மைதான அபிவிருத்திக்கான அடிக்கல் நாட்டு வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

மாணவர்களதும், பெற்றோர்களதும் கனவினை நனவாக்கும் அளப்பரிய சேவையை ஆசிரிய உத்தியோகத்தர்கள் ஆற்றி வருகின்றனர்.சில பாடசாலைகள் உரிய பௌதீக வசதி வாய்ப்புக்கள் இன்றிக் காணப்படுவதாக எமக்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

தற்போது இரண்டு வருட காலமாக கொரோனா நிலைமை காரணமாக நாட்டில் வருமானங்கள் அற்ற நிலையில் பல சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது.நாடு வழமைக்கு திரும்பும் போது அவ்வாறான குறைபாடுடைய பாடசாலைகளின் வளப் பற்றாக்குறைகள் படிப்படியாக நீக்கப்பட்டு மாணவர்கள் சந்தோசமான ஓர் மனநிலையில் கற்கக் கூடிய நிலை ஏற்படுத்தப்படும்.

மாணவச் செல்வங்களை நல்ல நிலைக்கு கொண்டு வந்து சொந்தக் காலில் தீர்மானிக்கும் சக்தியாக அவர்களை உருவாக்க வேண்டும் என்பதே அனைவரதும் விருப்பு. என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.(13)

# உயிரிழந்த மாணவர்களுக்கு யாழ்.பல்கலையில் அஞ்சலி

## -கிண்ணியா படகு விபத்தில்-



திருகோணமலை கிண்ணியா - குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் உயிரிழந்த மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு யாழ்.பல்கலைக் கழக மாணவ சமூகத்தால் நினைவேந்தல் நிகழ்வு நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது உயிரிழந்தவர்களின் புகைப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி மெழுகுவர்த்தி ஏற்றி மாணவர்கள் ஆத்மார்த்தமான முறையில் அஞ்சலியில் ஈடுபட்டனர்.

மேலும் குறித்த தமது கனவுகளைக் கொண்டு பாடசாலைக்குச் சென்று உயிரிழந்த மாணவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. (75)

# திருக்கோவிலில் புதையல் தோண்டிய 11 பேர் கைது

அம்பாறை, திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள வில்காமம் மலை பிரதேசத்தில் புதையல் தோண்டலில் ஈடுபட்ட 11 பேர் நேற்றிரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது புதையல் தோண்டலுக்கு பயன்படுத்திய உபகரணங்களையும் திருக்கோவில் பொலிசார் மீட்டுள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் உள்ள மலையில் கல்லுடைக்கும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்ற நிலையில் சம்பவதினமான நேற்று இரவு மலைக்கு அருகில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஒரு குழுவினர் ஈடுபட்டுவருவதாக பொலிசாருக்கு தகவல் கிடைத்துள்ளது. இதனையடுத்து குறித்த பகுதியை பொலிஸார் முற்றுகையிட்டபோது அங்கு புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த குழுவினர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் கைதானவர்கள் தம்பிலுவில் மற்றும் திருக்கோவில் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர். கைதான நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பொலிஸாரை தாக்கியமை தொடர்பில் தேடப்பட்டு வந்த 6 நபர்கள் கைது

கிளிநொச்சி - தர்மபுரம் பொலிஸ் பிரிவில் பிரமந்தனாறு பிரதேசத்தில் கடந்த ஒக்ரோபர் 4 ஆம் திகதி இரு தரப்பினருக்கிடையில் மோதல் தொடர்பில் விசாரணைகளுக்காகச் சென்ற தர்மபுரம் பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டதோடு, பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பிரதேசத்திலுள்ள சிலரால் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகி காயமடைந்தார்.

இவ்வாறு பொலிஸாரை தாக்கியமை தொடர்பில் தேடப்பட்டு வந்த 6 சந்தேகநபர்கள் வெலிக்கடை பொலிஸ் பிரிவில் ராஜகிரிய பிரதேசத்தில் தொழில் புரிந்து வருவதாக நுகேகொட குற்ற விசாரணைப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய குறித்த சந்தேகநபர்கள் 6 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 20, 23, 25 மற்றும் 28 வயதுகளையுடைய தர்மபுர மற்றும் பிரமந்தனாறு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர். நுகேகொட குற்ற விசாரணைப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# புதிய பரீட்சை ஆணையாளர் நியமனம்

புதிய பரீட்சை ஆணையாளர் நாயகமாக கல்வி அமைச்சின் பாடசாலை விவகாரங்களுக்கான மேலதிக செயலாளர் எல்.எம்.டி தர்மசேன நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பதவியில் பணியாற்றிய பீ. சனத் பூஜித நேற்று (26) ஓய்வு பெறுவதை முன்னிட்டு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, அடுத்த வாரம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகமாக எல்.எம்.டி.தர்மசேன கடமைகளைப் பொறுப்பேற்க உள்ளார்.

சனத் பூஜித 2017 ஆண்டு நவம்பர் மாதம் முதல் பரீட்சை ஆணையாளர் நாயகமாக பணியாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையிலிருந்து ஒரு இலட்சம் பேர் வெளியேற்றம்



இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் 92,000 இற்கும் அதிகமானோர் பதிவு செய்துள்ளதுடன், இவ்வருடத்தில் தொழில் நிமித்தம் ஏற்கனவேபெருமளவானோர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாக பணியகத்தின் பிரதி பொது முகாமையாளரான மங்கள ரந்தெனிய தெரிவித்தார்.

உலகளாவிய கொவிட் தொற்றால் கடந்த ஒன்றரை வருடங்களாக இடம்பெயர முடியாமல் இருந்த மூன்று குழுக்களுக்கு தற்போது வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பெரும்பாலான மக்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகவும், உயர்கல்வி நோக்கங்களுக்காகவும், வெளிநாட்டு அனுபவத்தைப் பெறவும் அங்கேயே வாழ்கின்றனர்.

உலகளாவிய தொற்றால் இந்த குழுக்கள் அனைத்தும் கடந்த காலத்தில் நாட்டை விட்டு வெளியேற முடியவில்லை.

கொவிட்-19 தொற்று பரவலால் இலங்கை சிவப்பு வலயமாக குறிப்பிடப்பட்டது. எனவே, பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன எனவும் அவர் தெரிவித்தார்.

நோய் தொற்று நிலைமை இப்போது நாட்டிலிருந்து விலகி வருகிறது, மேலும் நாடு பசுமை வலயமாக மாறுகிறது.

நாட்டின் தற்போதைய பசுமையான சூழ்நிலையில், மக்கள் இடம்பெயர்வதற்கான வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்கிறார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முஸ்லிம்களின் குரல்களுக்காக ஏக்கத்தோடு காத்திருக்கிறோம்

## -கனடா வாழ் இலங்கையர் மத்தியில் சுமந்திரன்-

நாங்கள் இஸ்லாமியச் சகோதரர்களுக்காகக் குரல் கொடுக்கிறோம். அதேவேளையில் தமிழ் மக்களினுடைய உரிமைகளுக்காக முஸ்லிம் குரல்கள் எப்போது எழும் என நாங்கள் ஏக்கத்தோடு காத்திருக்கிறோம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாரா ளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கனடா வாழ் இலங்கை முஸ்லிம் சமூகத்தினருடனான சந்திப்பு ஒன்று புதன்கிழமை ஒழுங்குபடுத்தப்பட்டது. இதன்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அவர் அங்கு மேலும் கூறுகையில்,

நாங்கள் இருவரும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை நடைப்பயண போராட்டம் இடம்பெற்ற போது இரண்டாவது நாளாக காத்தான்குடிக்கு வந்தபோது முழு காத்தான்குடியும் திரண்டு வந்து சந்தித்தது. ஒரு அரசியல் தலைவர்களும் வரவில்லை.

அதைத் தொடர்ந்தது ஓட்டமாவடியிலும் அதே போன்ற ஒரு வரவேற்பு. கிண்ணியாவில் மட்டும் தான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் எங்களை வந்து சந்தித்து எங்களோடு பக்கத்திலே நின்று உரையாற்றினார். வேறொருவரும் வரத் துணியவில்லை.

நாங்கள் இஸ்லாமியச் சகோதரர்களுக்காகக் குரல் கொடுக்கிறோம். அதேவேளையில் தமிழ் மக்களினுடைய உரிமைகளுக்காக முஸ்லிம் குரல்கள் எப்போது எழும் என நாங்கள் ஏக்கத்தோடு காத்திருக்கிறோம்.

போராட்டத்தின் போது எங்களுடன் முஸ்லிம் சமூகத்தினர் நடந்து வந்தார்கள். ஆனால் அவர்களின் எல்லைகளோடு நின்றுவிடுவார்கள். அப்போது நான் ‘முழுத்தூரமும் எங்களுடன் நீங்கள் நடந்து வர வேண்டும்’ என்று சொன்னேன்.

அது நடைப் பயணத்தில் மட்டுமல்ல. எங்களுடைய அரசியல் பயணத்திலும் எங்களுடன் கைகோர்த்து முழு தூரமும் வரவேண்டும். அப்போது தான் எங்களுடைய இரு சமூகங்களும் எங்களுடைய நாட்டிலே தலை நிமிர்ந்து வாழமுடியும் எனத் தெரிவித்துள்ளார்.

# புதிய வகை வைரஸ் குறித்து மாநில அரசுகளுக்கு எச்சரிக்கை

-நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோரிய பிரதமர் -





தென்னாப்பிரிக்கா, ஹொங்கொங் மற்றும் போட்ஸ்வானா ஆகிய நாடுகளில் பரவும் புதிய வகை கொரொனா வைரஸ் குறித்து, மத்திய அரசு மாநில அரசுகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனையடுத்து, வெளிநாடுகளிலிருந்து இந்தியாவிற்கு வருகை வரும் பயணிகளை தீவிரமாகக் கண்காணிக்குமாறு, தேசிய நோய்த் தடுப்பு மையம் அறிவுறுத்தியுள்ளது.

இது குறித்து மாநில அரசுகளுக்கு கடிதம் எழுதியுள்ள சுகாதாரச் செயலர் ராஜேஸ் பூஷண், இந்த மூன்று நாடுகள் மற்றும் நோய்ப் பரவல் அபாயமுள்ள நாடுகளிலிருந்து வரும் பயணிகளுக்கு, கட்டாயமாகக் கொரோனா பரிசோதனை செய்ய வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலத்தில், விசா கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, வெளிநாட்டு விமான சேவைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ள நிலையில், இந்தக் கண்காணிப்பு மிகவும் முக்கியமாகக் கருதப்படுகின்றது.

# இந்தியாவில் விரைவில் அறிமுகம் பெறும் ஸ்புட்னிக் லைட் தடுப்பூசி




கொரோனாவிற்கு எதிரான ஒற்றை டோஸ் தடுப்பூசியான ஸ்புட்னிக் லைட் தடுப்பூசி அடுத்த மாதம் இந்தியாவில் அறிமுகமாகவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள ரஷ்யாவின் நேரடி முதலீட்டு நிதியத்தின் தலைமைச் செயலதிகாரி கரில் ட்மிட்ரிவ், ஸ்புட்னிக் லைட் மருந்திற்கு இந்தியாவின் மருந்துக் கட்டுப்பாட்டாளர் ஜெனரல், மூன்றாம் கட்டச் சோதனைகளை நடத்துவதற்கு ரெட்டிஸ் நிறுவனத்திற்கு அனுமதியளித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த தடுப்பூசியானது, ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் முதல் பாகமாகக் கருதப்படுகின்றது. மேலும், இந்த மருந்தின் இரண்டாவது டோஸ் செலுத்திய 6 முதல் 8 மாதங்களில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக 80 சதவீதம் பயனுள்ளதாக இருக்குமெனவும், அறிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவில் சரிவடையும் கருத்தரிக்கும் எண்ணிக்கை மக்கள் தொகை குறைவடைய வாய்ப்பு



இந்தியாவில் கருத்தரிக்கும் எண்ணிக்கை குறைவடைந்து வருவதாக, ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதனால், மக்கள் தொகையில் சரிவு ஏற்பட வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழகம் மற்றும் கேரளா ஆகிய இரண்டு மாநிலங்களைத் தவிர்த்து, ஏனைய மாநிலங்களில் குழந்தை பெறும் எண்ணிக்கை இரண்டாக குறைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.ஆண் குழந்தைகளுக்கு ஈடாக, ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து, சமனிலை எட்டப்பட்டுள்ளதாக, ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

தமிழ்நாட்டிலும், புதச்சேரியிலும் 100 வீதமான பிரசவங்கள் மருத்துவமனையில் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பிறந்து 3 நாட்களில் தன்னிடமிருந்து பறிக்கப்பட்ட பிஞ்சுக் குழந்தையை

## 11 மாத பாசப் போராட்டத்தில் மீட்ட தாய்



கேரளத் தம்பதிக்குப் பிறந்த ஆண் குழந்தை 3 நாட்களில் பறிக்கப்பட்ட நிலையில், 11 மாதங்களுக்குப் பின்னர் அக் குழந்தையைக் கண்டுபிடித்துள்ளனர்.

கேரளாவின் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் ஆளும் கட்சியான சிபிஎம் கட்சியின் பிரதேச உறுப்பினராக இருக்கிறார். இவரின் மகள் அனுபமா. இவர் அப்பகுதியில் சக கட்சி உறுப்பினராக உள்ள அஜித் என்பவரை, கடந்த 5 வருடங்களாகக் காதலித்து வந்தார்.

அஜித் பட்டியலினத்தவரைச் சேர்ந்தவர். இதனால், வீட்டில் காதலுக்கு எதிர்ப்புக் கிளம்பியது. ஆனால், பெற்றோர் எதிர்ப்பையும் மீறி, அஜித்தை அனுபமா திருமணம் செய்து கொண்டார். அஜித் ஏற்கனவே திருமணமாகி விவகாரத்திற்கு விண்ணப்பம் செய்திருக்கிறார்.

இந்நிலையில், இருவரும் திருமணம் செய்து அனுபமா கர்ப்பமடைந்தார். இதனையடுத்து, மகளைச் சேர்ப்பதாக கூறிய ஜெயச்சந்திரன், தாய்மைக் காலம் என்பதால், கூடவே தங்க வைத்துக் கொண்டார்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் அனுபமாவுக்கு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த 3 நாட்களில், அனுபமாவிடமிருந்து குழந்தையைப் பிரித்த ஜெயச்சந்திரன் வேறொரு குடும்பத்திற்கு தத்துக் கொடுத்து விட்டார். முதலில் இது குறித்துத் தெரியாத அனுபமா, 6 மாதங்களுக்குப் பின்னரே, இந்த விடயம் தெரியவந்தது. தனது குழந்தையைத் தேடிக் கொண்டிருந்தார்.

தனது குழந்தையை 6 மாதமாக தேடி அலைவதாகக் கூறி, கேரள சட்டசபைக்கு வெளியே போராட்டம் நடத்தினார். குழந்தையை மீட்பதற்கு, 6 மாதங்களாக அரசு அமைப்புகளில் முறையிட்டுப் போராடினார்.

இதனையடுத்து, நீதிமன்றம் ஊடாக குழந்தையைத் தேடும் முயற்சியில் காவல்துறை, இறங்கியது. கடந்த ஞாயிறுக் கிழமை, கேளராவிலிருந்து ஆந்திர தம்பதிக்கு குழந்தை தத்துக்கொடுக்கப்பட்டதாக தெரியவந்தது. இதனையடுத்து, குழந்தையை திருவனந்தபுரத்திற்கு கொண்டு வந்த பின்னர் அனுபமா, அஜித் ஆகியோருக்கு டிஎன்ஏ பரிசோதனை செய்யப்பட்டது.

முடிவில், அவர்களது குழந்தைதான் என்பது உறுதியானது. இதனையடுத்து, குழந்தையை பெற்றோரிடம் ஒப்படைக்க முடிவு செய்துள்ளதாக குழந்தைகள் நலக் குழு நீதிமன்றத்தில் தெரிவித்தது.

அதன்படி, குழந்தை நீதிபதி முன்னிலையில் கொண்டு வரப்பட்டு, பின்னர் பெற்றோர்களான அனுபமா மற்றும் அஜித்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இதன்மூலம் அனுபமா - அஜித்தின் 11 மாத காலப் போராட்டம் முடிவுக்கு வந்தது. இந்நிலையில், குழந்தையை ஆந்திரத் தம்பதிகள், அவ்வப்போது வந்து பார்த்துக் கொள்வதற்கு, அனுபமா அனுமதி வழங்கியுள்ளார். மேலும், குழந்தையை வளர்த்த ஆந்திரத் தம்பதிக்கு, அனுபமா மிகுந்த நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் தக்காளியின் விலை சரிந்தது

சென்னை கோயம்பேடு காய்கறிச் சந்தையில் தக்காளி வரத்து அதிகரித்துள்ளதனால், விலை கடுமையாக சரிந்து கிலோ30 ரூபாவிற்கு விற்பனையாகி வருகின்றது. இதனால், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

வடகிழக்கு பருவமழையினால், தக்காளியின் வருகை வெகுவாகப் பாதிக்கப்பட்டது. இதனால், தக்காளியின் விலை கடுமையாக உயர்ந்தது. கோயம்பேடு காய்கறிச் சந்தையில் கடந்த 4 நாட்களாக 1 கிலோ தக்காளி 140 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. இந்நிலையில், 50 ரூபா குறைந்து நேற்று முன்தினம் 90ரூபாவிற்க்கு விற்பனையானது.

இந்நிலையில், நேற்று முதல் தக்காளியின் விலை அதிரடியாக 100 ரூபா குறைந்துள்ளது. இதனால், மொத்த விற்பனை 30 முதல் 35 வரை சிறுமொத்தக் கடைகளில் தக்காளி 1 கிலோ 40 ரூபாவிற்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

மேலும், வழக்கமாக ஆந்திரா, கர்நாடக, மஹாராஷ்டிரா ஆகிய வடமாநிலங்களிலிருந்து மொத்தம் 58 வண்டிகளில் சுமார் 850 தொன் தக்காளி வந்துள்ளது. இந்நிலையில் மீண்டும் தக்காளி வியாபாரம் களைகட்ட ஆரம்பித்துள்ளது.



# பென்சில் திருடிய நண்பனை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்ற 2 ஆம் வகுப்பு மாணவன்



பள்ளிக்கூடத்தில் தன்னுடைய பென்சிலைத் திருடிவிட்டதாக சக மாணவனை காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்ற 2ஆம் வகுப்பு மாணவனின் செயல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆந்திராவின் கர்னூல் மாவட்டத்திலுள்ள பெத்தகடுவூரை சேர்ந்த ஹனுமந்த் என்ற சிறுவன் அதே ஊரிலுள்ள பள்ளிக்கூடத்தில் 2ஆம் வகுப்பு படித்து வருகிறான்.

இதனிடையே சக மாணவன் ஒருவன் உட்பட மேலும் சில மாணவர்களை அழைத்துக்கொண்டு அங்குள்ள காவல் நிலையத்திற்கு சென்ற ஹனுமந்த், ஒரு மாணவன் மீது இவன் என்னுடைய பென்சிலைத் திருடி விட்டானென பொலிஸாரிடம் புகார் கூறினான்.

இரண்டாம் வகுப்பு படிக்கும் சிறுவனின் செய்கையைப் பார்த்து அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்த பொலிஸார் புகார் கூறிய மாணவனை சமாதானம் செய்து அனுப்பி வைக்க முயன்றனர். ஆனால், மாணவன் ஹனுமந்த் என்னுடைய பென்சிலைத் திருடியவன் மீது வழக்குப் பதிவு செய்ய வேண்டுமென பொலிஸாரிடம் கூறினான்.

வழக்குப்பதிவு செய்தால் பின்னர் நீதிமன்றம், ஜாமீன் என்று உன்னுடைய பென்சிலை திருடிய மாணவனின் பெற்றோர் அலைய நேரிடுமென பொலிஸார் கூறினர். அதற்குத் தேவைப்பட்டால் அவனுடைய பெற்றோர்களிடம் இது குறித்துக் கூறுவதாக ஹனுமந்த் பொலிஸாரிடம் கூறியுள்ளான்.

இதைத்தொடர்ந்து, இரண்டு பேரையும் சமாதானம் செய்த பொலிஸார் திருடிய பென்சிலைக் காண்பிக்கும்படி கேட்டனர். அப்போது மாணவன் ஹனுமந்த் ஒன்றரை அங்குலம் நீளமுள்ள ஒரு பென்சில் துண்டைக் காண்பித்து இந்தப் பென்சிலை தான் இவன் திருடி விட்டதாக கூறினான். சிரிப்பை அடக்க இயலாத பொலிஸார் இரண்டு பேரையும் சமாதானம் செய்து, வீட்டுக்கு அனுப்பி வைத்தனர்.

# இந்தியாவில் ஒரே நாளில் 10 ஆயிரத்திற்கும் அதிகமானோருக்கு கொரோனா

இந்தியாவில் புதிதாக 10 ஆயிரத்து 549 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதற்கமைய, கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 3 கோடியே 45 இலட்சத்து 55 ஆயிரத்து 431 ஆக அதிகரித்துள்ளது.

மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம், நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, கடந்த 24 மணி நேரத்தில் கொரோனா பாதிப்பிலிருந்து 9 ஆயிரத்து 868 பேர் குணமடைந்துள்ளனர்.

இதன்படி கொரோனா பாதிப்பிலிருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 3 கோடியே 39 இலட்சத்து 77 ஆயிரத்து 830 ஆக அதிகரித்துள்ளது. இந்நிலையில், கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களில், 1 இலட்சத்து 10 ஆயிரத்து 133 பேர், இந்தியாவின் பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதற்கிடையில், கொரோனா வைரஸ் பாதிப்பினால் கடந்த 24 மணி நேரத்தில் 488 பேர் உயிரிழந்துள்ளனர். இதற்கமைய, இந்தியாவில் கொரோனாவினால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை, 4 இலட்சத்து 67 ஆயிரத்து 488 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இந்தியா-மியன்மார் எல்லையில் நிலநடுக்கம்

இந்தியா - மியன்மார் எல்லையில் நேற்று அதிகாலை நிலநடுக்கம் உணரப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 6.1 ஆகப் பதிவாகியுள்ளதாகவும், இந்திய புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மிசோரம் மாநிலம் தென்சால் பகுதியிலிருந்து 73 கிலோமீற்றர் தொலைவில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டுள்ளதாகவும், தெரிவிக்கப்படுகின்றது. அதேநேரம், இந்த நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட சேத விபரங்கள், எதுவும் வெளியாகவில்லை.

# இந்திய எல்லைக்குள் ஊடுருவ முயன்ற பயங்கரவாதி சுட்டுக் கொலை

இந்தியாவிற்குள் ஊடுருவ முயன்று சுட்டுக் கொல்லப்பட்ட பயங்கரவாதிகளிடம் இருந்து ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக இந்திய இராணுவம் அறிவித்துள்ளது.

பாகிஸ்தானில் இருந்து பயங்கரவாதிகள் காஷ்மீர் மாநிலத்திற்குள் தொடர்ந்து ஊடுருவி வருகிறார்கள். அங்குள்ள பூஞ்ச் மாவட்டத்தில் கடந்த ஒக்ரோபர் மாதம் ஊடுருவிய பயங்கவாதிகள், 9 பாதுகாப்புப் படையினரை சுட்டுக் கொன்றனர். இதனால், அந்தப் பகுதியில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு தொடர்ந்து தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது.

இந்த நிலையில், நேற்றிரவு பூஞ்ச் மாவட்டம் பிம்பர்காலியில் பயங்கரவாதிகள் ஊடுருவியதையடுத்து, உடனே அந்த இடத்தை பாதுகாப்புப் படையினர் சுற்றி வளைத்தனர்.

அங்கு பதுங்கியிருந்த பயங்கரவாதியை, பாதுகாப்பு படையினர் சுட்டு வீழ்த்தினார்கள். அந்தப் பகுதியில் மேலும் பல பயங்கரவாதிகள் ஊடுருவி பதுங்கியுள்ளதாக கருதப்படுகிறது. எனவே, கூடுதல் படைகள் வரவழைக்கப்பட்டு, தொடர்ந்து தேடுதல் வேட்டை நடந்து வருகின்றது.

# ஆபிரிக்காவில் பரவும் புதிய வைரஸிற்கு விரைவில் கிரேக்கப் பெயர்

அதிக வீரியம் கொண்ட புதிய வகை வைரசிற்கு கிரேக்கப் பெயர் சூட்டப்படுமென உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

சீனாவின் வுகான் நகரில் முதன் முதலில் உருவான கொரோனா வைரஸ் ஆயிரம் தடவைக்கு மேல் உருமாறி, புதிய வகை வைரஸ்களாக உருவாகியுள்ளது. இவற்றில் சில அதிக வீரியம் கொண்டவையாகவும், சில வீரியம் இல்லாதனவையாகவும் உள்ளன.

புதிதாக உருவான டெல்டா, பீட்டா வகை வைரஸ்கள் உலகம் முழுவதும் அதிக வீரியத்துடன் தொடர்ந்து பரவி வருகின்றன. இந்த நிலையில், தென் ஆப்பிரிக்காவில் அதிக வீரியம் கொண்ட புதிய வகை கொரோனா வைரஸ் பரவி வருவதை, தற்போது கண்டுபிடித்துள்ளனர்.

இந்த வைரசிற்கு இன்னும் பெயர் சூட்டப்படவில்லை. பி.1.1.529 என்ற அடையாளக் குறியீட்டை வழங்கி இருக்கிறார்கள். புதிய வைரசிற்கு கிரேக்கப் பெயர் சூட்டப்படும் என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.



தென் ஆபிரிக்காவில் இதுவரை 22 பேரை புதிய வைரஸ் தாக்கியிருப்பதாக தென் ஆபிரிக்கா அரசு கூறியுள்ளது. தென் ஆபிரிக்காவிலிருந்து சென்ற பயணிகள் மூலம் ஹாங்காங், போட்ஸ்வானா ஆகிய நாடுகளிலும் புதிய வைரஸ் பரவியிருக்கின்றது. ஹாங்காங்கில் ஒருவருக்கும், போட்ஸ்வானாவில் 6 பேருக்கும் பரவி இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதன் பரவுதல் வேகமும், வீரியமும் மிக அதிகமாக இருப்பதாக தென் ஆபிரிக்க வைராலஜிஸ்ட் நிபுணர் ஒலிவெய்ரா கூறியுள்ளார். ஏற்கனவே, பரவி வரும் டெல்டா வைரஸ் 2 தடவைகளும் பீட்டா வைரஸ் 3 தடவையும் உருமாறியிருந்தன. ஆனால், இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள பி.1.1.529 கொரோனா 30 தடவை உருமாறி இருக்கின்றது. எனவே தான், வீரியம் அதிகமாக இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இதன் பரவுதல் வேகம் அதிகமாக இருப்பதனால், தென் ஆப்பிரிக்காவில் இன்னும் சில வாரங்களில் பல ஆயிரம் பேரை கொரோனா தொற்று தாக்கலாமென்ற அச்சம் நிலவுகின்றது. புதிய கொரோனா வைரஸ் அனைத்து தரப்பினரையும் தாக்குகின்றது. தென் ஆப்பிரிக்காவில் இளைஞர்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புதிய வைரஸ் எந்த அளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்? அதிக உயிரிழப்பை ஏற்படுத்துமா? என்பது இதுவரை தெரியவில்லை. அதன் தாக்கம் குறித்து தொடர்ந்து கண்காணித்து வருவதாக உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது.

தற்போது தென் ஆபிரிக்கா, ஹாங்காங், போட்ஸ்வானா ஆகிய 3 நாடுகளில் மட்டுமே பரவி இருப்பதனால், அந்த நாடுகளிலிருந்து வரும் பயணிகளை பல நாடுகளும் கண்காணிக்கத் தொடங்கியுள்ளன.

இதன் தாக்கம் அதிகமானால் 3 நாடுகளிலுமிருந்து வரும் பயணிகளுக்கு, மற்ற நாடுகள் தடை விதிக்கக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தியாவும் புதிய வைரஸ் பரவல் குறித்து கவலை அடைந்துள்ளது. இந்த 3 நாடுகளிலும் இருந்து விமானம் மூலம் வரும் பயணிகளை தீவிரமாக கண்காணிக்கும்படி, இந்தியா அனைத்து மாநிலங்களையும் கேட்டுக் கொண்டுள்ளது.

## சைபீரிய நிலக்கரிச் சுரங்க தீவிபத்தில் பலி எண்ணிக்கை 52 ஆக உயர்வு

சைபீரிய நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 52 சுரங்கத் தொழிலாளர்கள் மற்றும் மீட்புப் பணியாளர்கள் உயிரிழந்ததாக ரஷ்ய செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

தென்மேற்கு சைபீரியாவின் கெமரோவோ பகுதியில் உள்ள லிஸ்ட்யாஸ்னியா சுரங்கத்தில் நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) இந்த தீவிபத்து ஏற்பட்டது. மொத்தம் 285பேர், 820 அடி ஆழத்தில் நிலக்கரி வெட்டி எடுக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த, தீ வெடித்து காற்றோட்ட அமைப்பு மூலம் சுரங்கத்தை விரைவாக நிரப்பியது. இதனையடுத்து, மீட்புப் பணியாளர்கள் 239 சுரங்கத் தொழிலாளர்களை மேற்பரப்பிற்கு அழைத்துச் சென்றனர். அவர்களில் 49 பேர் காயமடைந்தனர்.

வெடிக்கும் மீத்தேன் வாயு மற்றும் தீயில் இருந்து நச்சுப் புகைகள் அதிக அளவில் குவிந்தமையினால், மீட்புப் பணியாளர்கள் 14 உடல்களைக் கண்டுபிடித்ததாகவும், பாதுகாப்பு காரணங்களுக்காக 38 பேரைத் தேடும் பணி நிறுத்தப்பட்டதாகவும், அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால், அவசரகால அதிகாரிகள்,உயிர் பிழைத்தவர்களைக் கண்டுபிடிக்க வாய்ப்பில்லை எனவும் கூறியுள்ளனர்.

இதுகுறித்து ரஷ்யாவின் துணை வழக்கறிஞர் ஜெனரல் டிமிட்ரி டெமேஷின் ஊடகங்களிடம் தெரிவிக்கும் போது, திப்பொறியால் ஏற்பட்ட மீத்தேன் வெடிப்பினால் தீ ஏற்பட்டிருக்கலாம். சுரங்கத்தில், நிலக்கரிப் படுக்கைகளில் இருந்து வெளியாகும் மீத்தேன் வெடிப்புகள் அரிதானவை எனினும், அவை நிலக்கரி சுரங்கத் தொழிலில் அதிக உயிரிழப்புகளை ஏற்படுத்துவதாகக் கூறியுள்ளார்.

ரஷ்யாவின் விசாரணைக் குழு, இறப்பிற்கு வழிவகுத்த பாதுகாப்பு விதிமுறைகளை மீறிய தீ விபத்து குறித்து, குற்றவியல் விசாரணையை ஆரம்பித்துள்ளதுடன், சுரங்க இயக்குநரும் இரண்டு மூத்த மேலாளர்களும் தடுத்து


## -புதியவகை கொரோனாவின் அச்சுறுத்தலினால்-

# ஆறு நாடுகளுக்கான விமான சேவையை இடைநிறுத்தியது பிரித்தானியா

தென் ஆபிரிக்காவில் இந்த வாரத்தில் கண்டறியப்பட்ட புதிய வகை வைரஸின் பரவுதல் வேகமும், வீரியமும் மிக அதிகமாகவே உள்ளது. உலகம் முழுவதிலும் பரவிய கொரோனா வைரசின் தாக்கம் தற்போது குறையத் தொடங்கியுள்ளது.

பெரும்பாலான நாடுகளில் புதிய பாதிப்பு மிகக் குறைந்த அளவிலேயே உள்ளன. எனினும், கொரோனா வைரஸ் அவ்வப்போது உருமாற்றம் அடைந்து, வீரியமாக பரவி வருவதால், சூழ்நிலைகளுக்கு ஏற்ப கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்படுகின்றன.

அவ்வகையில், புதிதாக உருமாற்றம் அடைந்த டீ. 1.1.529 என்ற வகை கொரோனா வைரஸ் பரவி வருகின்றது. தென் ஆபிரிக்காவில் இந்த வாரத்தில் கண்டறியப்பட்ட இந்த வைரஸ், அயல் நாடுகளான போத்ஸ்வானா உள்ளிட்ட சில நாடுகளுக்கு பரவியிருக்கின்றது.



இந்த வைரசின் பரவுதல் வேகமும், வீரியமும் மிக அதிகமாக உள்ளது. இந்த புதிய வகை வைரசானது, அதிக பாதிப்பை ஏற்படுத்துமென விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

குறிப்பாக தடுப்பூசி போட்டவர்களுக்கும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதையடுத்து தடுப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இந்நிலையில், புதிய வகை வைரஸ் பிரிட்டனில் பரவாமல் தடுக்கும் நடவடிக்கையை, அரசாங்கம் மேற் கொண்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக தென் ஆபிரிக்கா, நமிபியா, ஜிம்பாப்வே, போத்ஸ்வானா, லெசோத்தோ, எஸ்வாதினி (ஸ்வாசிலாந்து) ஆகிய தென் ஆபிரிக்க நாடுகளுக்கான விமான சேவையை பிரிட்டன் அரசு தற்காலிகமாக இரத்துச் செய்துள்ளது.

கடும் பயணக் கட்டுப்பாடுகளை விதித்து, அந்த 6 நாடுகளையும் சிவப்பு பட்டியலில் இணைத்துள்ளது.

எனினும், இந்த 6 நாடுகளில் இருந்து பிரித்தானியாவிற்கு வருவோர், அரசு அங்கீகாரம் பெற்ற ஹொட்டலில் 10 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆப்கானில் குண்டு வெடிப்பு 4 குழந்தைகள் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தானில் நடந்த இரண்டு குண்டுவெடிப்புச் சம்பவங்களில், குறைந்தது 4 குழந்தைகள் பரிதாபமாகப் பலியாகியுள்ளனர்.

.ஆப்கானிஸ்தான், காபூல் நகரின் பரபரப்பான பர்வான் பகுதியில் ஒரு வாகனம் மீது நேற்றுப் பிற்பகல் 4.15 மணியளவில் திடீரெனப் பயங்கரவாதிகள் வெடி குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தினார்கள்.

இந்தக் குண்டு வெடிப்பில் உயிர் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லையெனினும், வாகனங்கள் பலவும், சேதமடைந்தன. குண்டுவெடிப்பு தாக்குதலுக்கு இதுவரை எந்த குழுவும் பொறுப்பேற்கவில்லை. இதேபோல், வடக்கு தக்கார் மாகாணத்தின் தலைநகரான தாலுகானின் புறநகரில் நடந்த திடீர் விபத்தில்; நான்கு குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர். ஒரு குழந்தைக்கு பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

# படகு மூலம் நுழைபவர்களை திரும்பப் பெறுங்கள்- பிரான்ஸ்

பிரித்தானியாவிற்குள் ஆங்கிலக் கால்வாய் ஊடாக நுழைபவர்களை திரும்பப் பெற ஒப்புக் கொள்ளுமாறு பிரான்ஸிற்கு பிரித்தானியா அழைப்பு விடுத்துள்ளது.

பிரித்தானியாவை அடைய முயன்ற புலம்பெயர்ந்தோரை ஏற்றிச் சென்ற படகு, ஆங்கிலக் கால்வாயில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 27பேர் உயிரிழந்ததையடுத்து, பிரித்தானியப் பிரதமர் பொரிஸ் ஜோன்ஸனின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.


கடந்த புதன்கிழமை ஆங்கிலக் கால்வாயில் இடம்பெற்ற விபத்தில், 17 ஆண்கள், ஏழு பெண்கள் - அவர்களில் ஒருவர் கர்ப்பமாக இருந்தார் மற்றும் மூன்று குழந்தைகள் உட்பட 27பேர் உயிரிழந்தனர்.

இந்தநிலையில், மீண்டும் இதுபோன்ற விபத்து நிகழாமல் தடுப்பதற்கு தாம் எடுக்க விரும்பும் ஐந்து படிகளை கோடிட்டுக் காட்டி பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனுக்கு பிரதமர் பொரிஸ் ஜோன்ஸன் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இதில், பிரான்ஸ் கடற்கரையிலிருந்து அதிகமான படகுகள் வெளியேறுவதைத் தடுப்பதற்கு கூட்டு ரோந்து, சென்சார்கள் மற்றும் ரேடார் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், பரஸ்பர கடல் ரோந்துகள் ஒருவருக்கொருவர் பிராந்திய நீரில் மற்றும் வான்வழிக் கண்காணிப்பு, பிரான்ஸ் உடனான இருதரப்பு வருவாய் ஒப்பந்தத்தில் உடனடி வேலை என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், பிரதமர் பொரிஸ் ஜோன்ஸனின் பரிந்துரைகளை பிரான்ஸ் ஏற்றுக்கொள்வது கடினமென அறியமுடிகின்றது. உட்துறை செயலாளர் பிரிதி படேல், இந்த வார இறுதியில், தனது பிரான்ஸ் பிரதிநிதியை சந்தித்து, எதிர்கால ஒத்துழைப்பு குறித்து விவாதிக்கவிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவினால் ஒரு இலட்சம் உயிர்ப்பலியைக் கடந்த ஐந்தாவது நாடாக மாறிய ஜேர்மனி



ஐரோப்பாவில் ரஷ்யா, இங்கிலாந்து, இத்தாலி, பிரான்சைத் தொடர்ந்து கொரோனாவால் ஒரு இலட்சம் பலியைக் கடந்த 5-வது நாடு என்ற பெயரை ஜெர்மனி பெற்றுள்ளது.

கொரோனா வைரஸ் பெருந்தொற்று உருவாகி 2 ஆண்டுகள் ஆகியும் அதன் தாக்கம் இன்னும் உலக நாடுகளை பாடாய்படுத்தி வருகின்றது.இந்த நிலையில் ஜெர்மனியில் கொரோனா வைரஸ் பெருந்தொற்றினால், பலியானோர் எண்ணிக்கை 1 இலட்சத்தைக் கடந்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் அங்கு கொரோனாவால் 351 பேர் இறந்துள்ளனர். இதையடுத்து மொத்த பலி எண்ணிக்கை 1 இலட்சத்து 119 ஆக அதிகரித்துள்ளது.

ஐரோப்பாவில் ரஷியா, இங்கிலாந்து, இத்தாலி, பிரான்சைத் தொடர்ந்து கொரோனாவால் 1 இலட்சம் பலியைக் கடந்த 5-வது நாடு என்ற பெயரை ஜெர்மனி பெற்றுள்ளது.

மேலும், கடந்த 24 மணி நேரத்தில் அங்கு 75 ஆயிரத்து 961 பேருக்கு கொரோனா தொற்று பாதிப்பு உறுதி செய்யப்பட்டிருப்பதாக கொரோனா தொடர்பான தரவுகளை வெளியிடும் ராபர்ட் கோச் நிறுவனம் தெரிவித்துள்ளது. அங்கு பல வைத்தியசாலைகளிலும், தீவிர சிகிச்சை பிரிவுகளில் படுக்கைகள் நிரம்பி வழிவதாக தகவல்கள் கூறுகின்றன.



# Netflix இணையத் தொடரை நாட்டிற்குள் கொண்டு வந்த நபருக்கு வடகொரியாவில் மரண தண்டனை

வடகொரியாவில் இணையத் தொடரைப் பார்த்த குற்றத்திற்காக மாணவர் ஒருவருக்கு ஆயுள் தண்டனையும், மேலும் பல மாணவர்களுக்கு கடுமையான சிறைத் தண்டனையும், ஒருவருக்கு மரண தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளமை,அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கடும் தண்டனைகளுக்கும், சர்ச்சைகளுக்கும் பெயர்போன நாடான வடகொரியாவின் அதிபர் கிம் ஜாங் உன் அமெரிக்காவின் கடும் எதிர்ப்பையும் மீறி, பலமுறை அணு ஆயுத சோதனைகளை நடத்தி, உலக நாடுகளின் கண்களில் விரல் விட்டு ஆட்டி வருகிறார்.

புகழ்பெற்ற நெட்ஃபிளிக்ஸ் இணையத் தொடரான ஸ்குவிட் கேம் தொடரை சட்ட விரோதமாக பென் ரைவ்வில் இல் வட கொரியாவிற்குள் கடத்தி வந்து, அதை பென் ரைவ்வில் மூலம் விற்பனை செய்தவருக்கு தூக்குத் தண்டனையும், அந்த இணையத் தொடரைப் பார்த்த பள்ளி மாணவர்களுக்கு ஆயுள் தண்டனை உள்ளிட்ட கடுமையான தண்டனைகளையும், அந்நாட்டு அரசு அளித்திருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சீனா சென்று திரும்பிய வடகொரியாவைச் சேர்ந்த நபர் ஒருவர், ஸ்குவிட் கேம் தொடரின் பிரதியை பென் ட்ரைவ் மூலம் தனது நாட்டிற்குள் கொண்டு வந்திருக்கிறார். மேலும் அத்தொடரை அவர் பென் ட்ரைவ்களில் பிரதியெடுத்து, இரகசியமாக விற்பனை செய்தும் வந்திருக்கிறார். இவரிடம் ஸ்குவிட் கேம் தொடர் இருந்த பென் ட்ரைவை வாங்கிய, பள்ளி மாணவர் ஒருவர், பள்ளியில் தனது நெருங்கிய நண்பருடன் சேர்ந்து, அத்தொடரை பார்த்திருக்கிறார்.

மாணவர்கள் இப்படி இரகசியமாக இணையத் தொடரைப் பார்த்தது, இரகசிய புலனாய்வு மூலம் அரசின் கவனத்துக்கு சென்றது.

இது குறித்து வடகொரிய அரசு விசாரணைகளை மேற்கொண்டது. அதன்படி வட கொரியாவுக்குள் தடை செய்யப்பட்ட இணையத் தொடரைக் கொண்டு வந்த நபருக்கு மரண தண்டனையும், அந்த நபரிடம் இருந்து இணையத் தொடர் அடங்கிய பென் ட்ரைவை வாங்கிய பள்ளி மாணவருக்கு ஆயுள் தண்டனையும், சம்பந்தப்பட்ட மாணவரின் Pen drive ஐ வாங்கி, காணொளிகளைப் பார்த்த 6 மாணவர்களுக்கு தலா 5 ஆண்டுகள் கடும் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

ஆனால்,மரண தண்டனை துப்பாக்கிச்சூடு மூலம் நிறைவேற்றப்படுமெனவும், அறிவிக்கப்பட்டுள்ளது. இதுதவிர பள்ளியின் தலைமையாசிரியர், வகுப்பாசிரியர் உள்ளிட்டவர்கள் பணி நீக்கம் செய்து வட கொரிய அரசு உத்தர விட்டுள்ளது.

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.